www.tamilarangam.net

1948 முதல் 1996 வரை...

# ஈழத் தமிழர்களின் உரிமைப் போர் வரலாறு

கு.வே.கி. ஆசான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திராவிடர் கழக வெளியீடுகள்

| வ.எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. | சுயமரியாதை திருமணம் ஏன்? | தந்தை பெரியார் |
| 2. | கடவுள் மறுப்பு ஒரு தத்துவ விளக்கம் | தந்தை பெரியார் |
| 3. | தந்தை பெரியாரே எழுதிய சுயசரிதை | தந்தை பெரியார் |
| 4. | இனிவரும் உலகம் | தந்தை பெரியார் |
| 5. | கடவுளும்-மனிதனும் | தந்தை பெரியார் |
| 6. | பெண் ஏன் அடிமையானாள்? | தந்தை பெரியார் |
| 7. | திராவிடர்-ஆரியர் உண்மை | தந்தை பெரியார் |
| 8. | உயர் எண்ணங்கள் | தந்தை பெரியார் |
| 9. | அறிவு விருந்து | தந்தை பெரியார் |
| 10. | புத்தநெறி | தந்தை பெரியார் |
| 11. | மனிதனும், மதமும் | தந்தை பெரியார் |
| 12. | வகுப்புவாரி உரிமை ஏன்? | தந்தை பெரியார் |
| 13. | இமாலய புரட்டு | தந்தை பெரியார் |
| 14. | இராமாயணக் குறிப்புகள் | தந்தை பெரியார் |
| 15. | கோயில் பகிஷ்காரம் ஏன்? | தந்தை பெரியார் |
| 16. | வாழ்க்கைத் துணை நலம் | தந்தை பெரியார் |
| 17. | சோதிட ஆராய்ச்சி | தந்தை பெரியார் |
| 18. | இராமாயணப் பாத்திரங்கள் | தந்தை பெரியார் |
| 19. | மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி | தந்தை பெரியார் |
| 20. | பெரியார் அறிவுரை | தந்தை பெரியார் |
| 21. | தத்துவ விளக்கம் | தந்தை பெரியார் |
| 22. | தமிழும் தமிழரும் | தந்தை பெரியார் |
| 23. | ஆச்சாரியார் ஆட்சியின் கொடுமைகள் | தந்தை பெரியார் |
| 24. | சிந்தனையும் பகுத்தறிவும் | தந்தை பெரியார் |
| 25. | சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்ததேன்? | தந்தை பெரியார் |
| 26. | திருக்குறளும் - பெரியாரும் | தந்தை பெரியார் |
| 27. | தமிழர் - தமிழ்நாடு - தமிழர் பண்பாடு | தந்தை பெரியார் |
| 28. | கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே! | ஈ.வெ.ரா. மணியம்மையார் |
| 29. | 69% இட ஒதுக்கீடு நிலைக்க வழி | கி. வீரமணி |
| 30. | இட ஒதுக்கீடு கேள்விகளுக்கு பதில்கள் | கி. வீரமணி |
| 31. | சக்தி வழிபாடு | கி. வீரமணி |
| 32. | நமது குறிக்கோள் | கி. வீரமணி |
| 33. | ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தம் | கி. வீரமணி |
| 34. | புட்டபர்த்தி சாய்பாபா | கி. வீரமணி |
| 35. | சங்கராச்சாரி-யார்? | கி. வீரமணி |
| 36. | சமூகநீதி | கி. வீரமணி |
| 37. | தமிழக முன்னோடிகள் - தந்தை பெரியார் | கி. வீரமணி |
| 38. | சிதம்பர ரகசியம் | கி. வீரமணி |
| 39. | 'சன்' தொலைக்காட்சிக்கு பொதுச் செயலாளர் பேட்டி | கி. வீரமணி |
| 40. | பெரியாரும் - இராமலிங்கனாரும் | கி. வீரமணி |
| 41. | பெரியார் களஞ்சியம் தொகுதி - 1 முதல் 6 | கி. வீரமணி |
| 42. | பெரியாரியல் | கி. வீரமணி |
| 43. | அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையாரின் சிந்தனை முத்துக்கள் | கி. வீரமணி |
| 44. | கழகமும் பிரச்சாரமும் | கி. வீரமணி |
| 45. | பாரதிய ஜனதா மக்கள் விரோத கட்சியே | கி. வீரமணி |
| 46. | சட்டப்படி இன்னும் நாம் சூத்திரரே | கி. வீரமணி & பி.ஆர். குப்புசாமி |
| 47. | 69% - போராட்டம் முதலமைச்சரின் எச்சரிக்கையும் பொதுச் செயலாளரின் பதிலும்! | கி. வீரமணி |
| 48. | வகுப்புரிமை வரலாறு | கி. வீரமணி |
| 49 | செல்வர், கிட்ஸ் வழக்கும் பொது வாழ்க்கையும்...! | கி. வீரமணி |
| 50 | பிரார்த்தனை மோசடி | கி. வீரமணி |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**1948 முதல் 1996 வரை...**

# ஈழத் தமிழர்களின் உரிமைப் போர் வரலாறு

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

— கு.வெ.கி. ஆசான் —

வெளியீடு: திராவிடர் கழகம்
பெரியார் திடல், சென்னை 600 007

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்றாம் பதிப்பு: 1998

© பதிப்புரிமை பெற்றது.

நன்கொடை ரூ. 6/-

'விடுதலை' ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 600 007



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தந்தை செல்வா தலைமையில் அறப்போர்

இங்குள்ள தமிழர்களுக்கு அரைகுறை உரிமைகளே இருக்கின்றன. அவற்றையும் பறித்து அவர்களை அடிமைகளாக்கு வதற்கான ஒத்திகை ஈழத்தில் நடைபெறுகிறது. பேரினவாதச் சிங்கள ஆதிக்க வெறியரசு திட்டமிட்டுச் செய்யும் இரக்கமற்ற தாக்குதல் காரணமாக, அங்கு அவ்வப்பொழுது இனப்படுகொலை நடக்கிறது. நிலத்திலிருந்து கவச வண்டிகளும், நீரிலிருந்து கப்பற்ப டையும் வீசும் குண்டுகளன்றி, வானிலிருந்து போர் விமானங்களும் குண்டுமாரி பொழிகின்றன. அதன் காரணமாக, உயிர்தப்பிக்க, ஊரைவிட்டே வெளியேற வேண்டிய நிலையில் பொதுமக்கள் உள்ளனர். வீடும், உடைமையும் விடுத்து, ஏதுமற்ற எதிலிகளாக (அகதிகளாக) வரும் சாதாரண மக்களுக்குப் புகலிடமாகக்கூடப் பயன்பட முடியாத நிலையில் தமிழ்நாடு ஆக்கப்பட்டிருக்கிறது. இதைவிடக் கொடுமை வேறு ஏதேனும் உண்டா?

ஆதரவற்ற இலங்கைத் தமிழர்களுக்குப் புகலிடம் கொடுக்க மறுக்கும் கொடுமையை ஏற்கும் உணர்வற்றவர்களாகத் தமிழக மக்கள் இருக்கிறார்களா என்னும் சோதனை நடைபெறுகிறது. இனவுணர்வும், பொதுவான மாந்த நேய உணர்வும் அற்றவர்களாக அவர்களை வைத்திருப்பதில் பார்ப்பனியத் தரகு முதலாளிய ஆதிக்கக் கூட்டம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. வானொலி, தொலைக்காட்சி, இதழ்கள், தாளிகைகள் முதலிய அனைத்து மக்கள் தொடர்புக் கருவிகளையும் அதற்காகப் பயன்படுத்திப் பாமரர்கள், படித்தோர் ஆகிய அனைவரையும் மூளைச் சலவை செய்கிறார்கள். செய்திகளை மறைத்தும், திரித்தும், இல்லாதன - பொல்லாதன சொல்லியும் பொதுமக்களின் கருத்தைச் சிதைக்கி றார்கள். கருத்துக் குருடர்களுக்கு எதிர்காலம் கண்ணுக்குத் தெரி யாது; உரிமையைப் பற்றிய உணர்வு தோன்றாது; அந்நிலையில் அவர்களை அடிமைப்படுத்துவது எளிதாகும். இதுதான் ஆதிக்கவா திகளின் கணிப்பும் திட்டமும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- கல்வியை இழந்து, உடல் உழைப்பை மட்டும் பெரும்பாலும் நம்பி வாழும் சூத்திர - பஞ்சமராய்ப் பன்னூறாண்டுகளாக அழுத்தப்பட்டுள்ள தமிழிரிடையே, இந்துமத, வருணசாதி காரண மாகவும், வரலாற்றுப் போக்கிலும் அமைந்துவிட்ட பிரிவினைக ளைத் தங்களுக்குச் சாதகமாக ஆதிக்கக் கூட்டத்தார் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தமிழரின் ஒரு பிரிவினருக்கு நிகழும் அநீதியைப் பற்றி மற்றப் பிரிவினர் கவலைப்படாத தற்கொலைத் தன்மை, அவர்களை ஒட்டுமொத்தமான அடிமைகள் ஆக்குகிறது.

இலங்கை 1948 இல், ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. அது சிங்களருக்கு வாழ்வாகவும், அந்நாட்டுத் தமிழருக் குத் தாழ்வாகவும் அமைந்தது. அன்று பிரதமராயிருந்த, டான் ஸ்டீபன் சேனநாயகா, மலைத் தோட்ட தமிழரின் குடி உரிமையை யும், வாக்குரிமையையும் பறித்தார். ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் இயங்கிய ஈழவரின் கட்சியான இலங்கைத் தமிழர் காங்கிரசு, தோட்டத் தொழிலாளருக்கு நிகழ்ந் அநீதியை எதிர்த் துக் குரல் எழுப்பவில்லை. ஓர் இனத்தின் ஒரு பகுதியினருக்கு நேர்ந்த துயரைப் பகிர்ந்து கொள்ளாத போக்கைக் கண்டித்து, அக் கட்சியை விட்டு வெளியேறிய, காலம் சென்ற சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் புதிதாகத் தமிழரசுக் கட்சியை 1949 இல் தோற்றுவித்தார்.

தொலைநோக்குப் பார்வையும், தமிழருக்கான தளரா உழைப்பும் செல்வநாயகம் அவர்களைத் தந்தை செல்வா ஆக்கியது. தோட்டத் தொழிலாளரை நாடற்றோர் ஆக்கிய குடியுரிமைச் சட்ட முன்வ ரைவு, 1948 டிச. 10 இல் இரண்டாவது முறையாக இலங்கை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அப்பொழுது செல்வா இவ்வாறு எச்சரித்தார்: ''இலங்கைத் தமிழர், இந்திய மரபுத் தமிழர், முஸ்லீம்கள் ஆகியோரைப்பற்றி அரசிற்குப் பயமாக இருக்கிறது. இவர்களை நசுக்குவதற்குத்தான் பிரதமர் விரும்புகி றார். எம்மை (பூர்வீக ஈழவர்களை) அவர் இன்று நேரடியாக நசுக்கவில்லை. ஆனால், மொழிப் பிரச்சினை கிளப்பப்படும் காலத்திற்றான் எமக்குத் தெரியவரும் - தமிழரது நிலை என்ன வென்பது. சிறுபான்மை இனத்தவருக்கு எதிராக இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் பாரபட்சமான வகுப்புவாத சட்டமியற் றும் வரிசையில் அடுத்து வரவிருப்பது இந்த மொழிப்பிரச்சினையா கவே இருக்கப் போகிறது''

செல்வா அவர்கள் அஞ்சியது போன்றே 1956 இல் ''சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி'' எனும் சட்டம் இயற்றப்பட்டது. இதை எதிர்த்துத் தமிழர்கள் அறப்போரில் ஈடுபட்டனர். ஆனால், நாடா ளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அமைதிப் போராளிகள் தாக்கப்

www.tamilarangam.net

பட்டனர். நாடுமுழுவதும் தமிழருக்கு எதிராகச் சிங்களர் இனத்தாக்குதல் தொடங்கினர். அப்பொழுது பிரதமராக இருந்தவர், சாலமன் பண்டார நாயகா. கேரளத்தில் பண்டுவம் பார்த்துவரும் இலங்கைப் பிரதமர் சிறிமாவோவின் கணவரும், முப்படைகளைக் கொண்டு இனவெறித் தாக்குதலில் ஈடுபட்டுள்ள குடியரசுத் தலைவர் சந்திரிகாவின் தந்தையாரும் இவரே!

உரிமைப் போரைத் தொடங்கிவிட்ட அறப்போராளிகள், சிங்கள இனவெறி அடக்குமுறைக்கு அஞ்சவில்லை. 1956 ஆகஸ்டில், திருக்கோணமலையில் நடந்த தமிழரசுக் கட்சி மாநாட்டில் ஒன்று திரண்டனர். இங்கு நிறைவேறிய தீர்மானங்கள் - இலங்கைத் தமிழரின் குறைந்த பட்ச அடிப்படை உரிமைகளைச் சுட்டுவதால், அவற்றை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

1. ஒற்றை (யுனிடரி) ஆட்சிக்கு மாற்றாக, கூட்டரசு (ஃபெடரல்) ஆட்சி முறை வேண்டும். தமிழ் மாநிலங்களுக்குத் தன்னாட்சி (அடானமி) வேண்டும்.

2. தமிழும், சிங்களமும் சம உரிமையுள்ள மய்ய அரசு மொழிகள் ஆக வேண்டும்.

3. குடியுரிமைச் சட்டத்தை எளிமையாக்கி, இலங்கையைத் தாயகமாகக் கொண்ட அனைவருக்கும் குடியுரிமை வழங்கவேண்டும்.

4. தமிழரின் பாரம்பரிய நிலங்களில் சிங்களர் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் ஓராண்டிற்குள் ஏற்கப்படாவிடில் மறியல் செய்வதென அறிவிக்கப்பட்டது. தமிழரின் ஒற்றுமையையும், எழுச்சியையும் கண்ட சாலமன் பண்டார நாயகா, இந்த நியாயமான நிலையை மறுக்க முடியாமல், தந்தை செல்வா அவர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். 1957 ஜூலையில் செய்யப்பட்ட செல்வா - பண்டா ஒப்பந்தம் வெறும் ஏட்டளவில் நின்று விட்டது. ஆளுங்கட்சியான, சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் (எஸ்.எல்.எஃப்.பி) ஒரு பிரிவினரும், எதிர்க்கட்சியான அய்க்கிய தேசிய கட்சியும் (யு.என்.பி) ஒப்பந்தத்தை எதிர்த்ததால் அதை நடைமுறைப்படுத்தும் துணிவு சாலமன் பண்டார நாயகாவிற்கு வரவில்லை.

## இனத் தாக்குதல்

பிரதமர் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை ஏட்டளவில் வைத்துக் கொண்டதுடன், 1958 ஜனவரியில் தமிழரின் தன்மானத்தையும், தனித் தன்மையையும் கெடுக்கும்படியாக ஓர் ஆணை பிறந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உந்து வண்டிகளில் (மோட்டார் வாகனங்களில்) சிறீ என்பதை அனைவரும் சிங்கள மொழி வரிவடிவில் எழுத வேண்டும் என்றது அரசு. தங்கள் உரிமையை நிலைநாட்ட விரும்பிய தமிழர், கிரந்த வடிவில் சிறீ எனப் பொறித்தனர். இதை எதிர்த்து சிங்களர் கூட்டமாகத் தமிழரைத் தாக்கினர்; வண்டிகளை எரித்தனர்; தந்தை செல்வாவை மட்டக்களப்புச் சிறையில் அடைத்தனர்.

எழுச்சி பெற்ற தமிழர்கள், 1958 மே மாத இறுதியில் வவுனியாவில் மாநாடு கூட்டினர். அந்தை தடுக்கச் சூழ்ச்சி செய்து, சிங்களக்காடையர் இனக் கலவரத்தைத் தூண்டினர். அதற்கு, அரசும், சிங்கள எதிர்கட்சியான அய்க்கிய தேசியக் கட்சியும் (யு.என்.பி.) ஆதரவளித்தன. குழந்தைகள், பெண்கள் உள்பட அப்பாவித் தமிழர்கள் குறைந்தது 400 பேர் மாண்டனர். தமிழரின் உடைமைகளைப் பறித்தனர்; எரித்தனர்; நாசமாக்கினர். கொழும்பு ராயல் கல்லூரி முகாமில் மட்டும் 12,000 பேர் ஏதிலிகளாய் அடைக்கலம் புகுந்தனர்.

1958-இல் தமிழ் மொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் இயற்றப் பட்டது. அதன்படி நுழைவுத் தேர்வுகளைத் தமிழில் எழுதலாம்; வடக்கு, கிழக்கு மாநில நிருவாகத்திற்குத் தமிழைப் பயன்படுத்த லாம். இந்தச் சட்டம் ஒரு கண்துடைப்பு என்பதை மெய்ப்பிக்கும் வகையில், அதைக் கிடப்பிலே போட்டனர்; அது நடப்பிலே வரவில்லை. இந்நிலையில் 1959 செப் 25 இல் சாலமன் பண்டார நாயகாவைச் சிங்கள வெறியன் ஒருவன் பித்தபிட்சு வடிவில் வந்து கொன்று விட்டான்.

## சிறிமாவோ

சாலமன் பண்டார நாயகாவின் மனைவியார் சிறிமாவோ ஆட்சிக்கு வந்தார். தமிழ் மொழிச்சட்டத்தை இவரும் நடப்பில் கொண்டுவரவில்லை. மாறாக, டிச. 1960, இல் மற்றுமொரு ஆதிக்கச் சட்டம் கொண்டு வந்தார். அதன்படி நாடு முழுமையும் உள்ள நீதிமன்றங்களில் சிங்களமே பயன்மொழி ஆயிற்று.

ஆதிக்க வல்லாண்மைப் போக்கை எதிர்ப்பது என 1961 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் கூடிய மாநாட்டில் முடிவு செய்த னர். அடுத்த மாதமே அறப்போர் தொடங்கிற்று. அதில் ஈடுபட்ட வர்களை முரட்டுத்தனமாக அடித்து நொறுக்கினர். ஆனால் கிளர்ச்சி வேகம் பெற்றது. தமிழ் ஈழப் பகுதியில் நிருவாகமே நின்றது; ஏப்ரல் 14-இல் தனி அஞ்சல் முத்திரைகளை வெளியிட்டு, தாங்களாக நிருவாகத்தை நடத்த முடியும் என தமிழர்கள் மெய்ப் பித்தனர்.

www.tamilarangam.net

## அறிஞர் அண்ணா

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து, அநியாயத்தை எதிர்த்து, உரிமைக்கான அறக் கிளர்ச்சியில் உறுதியுடன் இலங்கைத் தமிழர்கள் ஈடுபட்டிருப்பதைக் கண்டு சிங்களப் பேரினவாத அரசு மிரண்டது. ஈழத் தமிழ் நிலத்தை ராணுவ ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. இந்த நேரத்தில், 1961 இல், அறப்போராளிகள் காட்டு விலங்காண்டித்தனமாகத் தாக்கப்பட்டதையும், படைகொண்டு ஆட்சி நடத்துவதையும் கண்டித்து, உலக மன்றம் தலையிடக் கோரி, அறிஞர் அண்ணா ஒரு தொலைவரியை (தந்தியை) அய்க்கிய நாடுகள் அவைக்கு அனுப்பினார்.

## மீண்டும் ஒப்பந்த மறுதலிப்பு:

1965இல் இலங்கையில் பொதுத் தேர்தல் நடந்தது. சிங்களர் கட்சிகள் முக்கியமாக இரண்டு. ஒன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி; மற்றது அய்க்கிய தேசியக் கட்சி. இந்தத் தேர்தலில் இரண்டுமே பெரும்பான்மை பெறவில்லை. செல்வா அவர்களின் தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழத்தில் 16 தொகுதிகளில் 14-ல் வெற்றி பெற்றது. அரசு அமைக்க, அக்கட்சியின் ஒத்துழைப்பைச் சிங்களரின் பெரிய கட்சிகள் இரண்டுமே நாடின. எதை ஆதரிப்பது?

ஏற்கெனவே, சாலமன் பண்டார நாயகா, சிறிமாவோ ஆகியோர் ஆட்சியில் சுதந்திரக் கட்சி, தமிழரை அடக்கும் வேலையில் ஈடுபட்டதால், அய்க்கிய தேசியக் கட்சிக்கு (யுன்.என்.பி) ஒத்து ழைப்பு நல்கத் தமிழரசுக் கட்சி விரும்பியது. தமிழருக்கு நியாயம் தரவேண்டும் எனும் நிபந்தனையுடன், அக்கட்சி அமைச்சர் அவையில் சேர்ந்தது. 1966 இல், அரசாங்க, நிருவாக காரியங்களில் தமிழைப் பயன்படுத்துவதுபற்றி விதிகள் செய்யப்பட்டன. மாவட்ட மன்றங்களை அமைப்பதாகவும் ரகசிய ஒப்பந்தம் செய்து கொடுத்தனர். ஆனால், விதிகளையோ, ரகசிய ஒப்பந்தத்தையோ, டட்லி சேனநாயகாவைப் பிரதமராகக் கொண்ட அய்.தே. கட்சி அரசு செயல்படுத்தவில்லை. இதனால், ஏமாற்றம் அடைந்த தமிழரசுக் கட்சி 1968 இல் அமைச்சரவையில் இருந்து விலகிக் கொண்டது.

டட்லி சேனநாயகா அரசு 1969 இல் உயர்கல்விக் குழு ஒன்றை நியமித்து. இதில் இரு சிங்களர், ஒரு ஆங்கிலேயர், ஒரு கனடாக்காரர் ஆகியோர் உறுப்பினர். இலங்கையின் இரு தேசிய இனங்களில் ஒன்றைச் சார்ந்த தமிழருக்கு இடம் இல்லை.

உலக வங்கி உள்ளிட்ட, பன்னாட்டு நிதியங்களின் உதவியுடன் மகாவெளிகங்கைத் திட்டம் ஒன்றைப் பெரிதாக 1970 மார்ச் மாதத்தில் அறிமுகப்படுத்தினர். தமிழர், சிங்களர் எனும் இரு இனத்தாரின் நிலங்களுக்கும் நன்கு பயன்படும் வகையில் அதை அமைத்திருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யவில்லை. சிங்கள ரின் வளர்ச்சிக்குப் பயன்படுவதாக அமைத்தனர்.

இவ்வாறு, அநியாய ஆதிக்கச் சட்டங்கள் இயற்றுவதும், ஒப்பந் தங்களைப் புறக்கணிப்பதும், விதிகளைத் திரிப்பதும், இனக் கலவரத்தில் இறங்குவதும், ஓரவஞ்சகச் செயல்களில் ஈடுபடுவதும் ஆன வகைகளில் தமிழருக்குக் கேடு செய்தனர். இவற்றிற்கு எல்லாம் மேலாக, பாரம்பரியமாகத் தமிழர்கள் வாழ்ந்த பகுதிக ளில் சிங்களரைக் குடியமர்த்தி, நிலப்பறிப்பு எனும் கொடுமையை யும் செய்தனர். ஈழவரின் மொழியுரிமையோடு மண்ணுரிமையும் மறுக்கப்பட்டது.

## அடிமைச் சாசனம்:

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரண்டு பெரிய சிங்களர் கட்சிகளும் பேரின ஆதிக்கப் பார்வை கொண்டவை. தமிழரைத் தாழ்த்திச் சுரண்டி அடிமைப்படுத்துவதில் ஆர்வம் கொண்டவை. அக்கட்சிகளின் இடையறா நடப்புகள் இதை மெய்ப்பிக்கின்றன. ஆனால், சிங்கள இனத்திற்கு உயர்வும், தமிழருக்குத் தாழ்வும் உண்டாக்கும் செயல்களை அவர்கள் சட்டப் படி செய்வதற்கு, 1948 ஆம் ஆண்டின் (சோல்பரி) அரசியல் அமைப்பு தடையாக இருந்தது. எப்படி?

செல்லய்யா கோடீசுவரன் ஓர் இலங்கை அரசு ஊழியர். 1962 ஏப்ரல் முதல் அவருக்குச் சம்பள உயர்வு தரவில்லை. சிங்கள மொழித் தேர்வில் அவர் வெற்றிபெறவில்லை எனக் காரணம் காட்டினர். 1956 ஆம் ஆண்டின் ஆட்சி மொழிச் சட்டம் அவரைப் பாதித்தது. சட்டம் செல்லாது எனக் கூறி நீதிமன்றம் சென்றார். அவருக்காக, மு. திருச்செல்வம் வாதிட்டார். 1948 ஆம் ஆண்டு (சோல்பரி) அரசியல் அமைப்பின் 29 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவு, இலங்கையில் வாழும் வெவ்வேறு சமூகங்களுக்குச் சமநிலையை அளித்தது. தமிழர் தனித்த சமுதாயம் என்றும், அவர்களின் சமநிலை 1956 ஆம் ஆண்டு சட்டப்படி பாதிக்கப்படுகி றது என்றும் நீதிமன்றத்தில் கூறப்பட்டது. தமிழர் தனிச் சமூகம் அல்லர் என அரசு சார்பில் வாதிட்டனர். இருப்பினும், கோடீசுவர னுக்குச் சார்பாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதாவது, ஆங்கில ஆட்சி விலகிய பொழுது, இலங்கையில் வாழும் வெவ்வேறு சமூகத்தாருக்கு நிகரான உரிமை அளிக்கும் அரசியல் அமைப்பு நடப்பிற்கு வந்தது. ஆகையால், தமிழர்களுக்குச் சமஉரிமை அளிக்காத 1956 ஆம் ஆண்டுச் சட்டம் செல்லாது எனத் தீர்ப்பா யிற்று.

இந்தத் தீர்ப்புக்குக் காரணமான, 1948 ஆம் ஆண்டு (சோல்பரி) அரசியல் அமைப்பின் 29 (2) ஆம் பிரிவை, நாடாளுமன்றத்தின் சட்டத்தின்மூலம் மாற்றமுடியாது என, லஞ்ச ஆணையாளர் - ரணசிங்கா ஆகியோரிடையே நடந்த வேறு ஒரு வழக்கில் தீர்ப்பாயிற்று.

www.tamilarangam.net

இந்நிலையில், சிங்களர் மேலாண்மையை உறுதிப்படுத்தும் வகையில் புதிய ஒரு குடியரசுச் சட்டத்தை வகுப்பதென முடிவாயிற்று. சிறீலங்கா சுதந்திரக் கட்சி (எஸ்.எல்.எஃப்.பி.), லங்கா சம சமாஜக் கட்சி, இலங்கை பொதுவுடைமைக் கட்சி ஆகிய மூன்றும் சேர்ந்து, கூட்டணி அமைத்து, 1970 இல் போட்டியிட்டன. நாடாளுமன்றத்தில் 157 இடங்களில் 116-அய்ப் பிடித்தன. ஆனால், ஈழத் தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஓர் இடம் கூடக் கிடைக்கவில்லை. சிங்களக் கூட்டணி ஒற்றை ஆட்சி (யுனிடரி) முறையை முன்வைத்துப் போட்டியிட்டது. ஆனால் ஈழத் தேசியத்தார் கூட்டாட்சி (ஃபெடரல்) ஆட்சி முறை வேண்டுமென்றனர்.

இந்த இடத்தில், 1949 டிச. 18 இல், கொழும்பில் நடைபெற்ற, தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டுத் தலைமை உரையில் தந்தை செல்வா குறிப்பிட்டது கவனத்திற்குரியது: ''பெரிதும் சிறிதுமாக உள்ள மொழியினங்களிடையே ஏற்படும் முரண்பாடுகள் போருக்குக் காரணமாக இருந்துள்ளன. இப்போர்களில் வல்லரசுகள்கூட இழுக்கப்பட்டுள்ளன. மொழி இனங்களிடையே உள்ள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு இருவழிகள் உண்டு. ஒவ்வொரு மொழியினத்திற்கும் இறைமை (அரசுரிமை) உடைய தனித்தனி நாடுகளை அமைக்கப் பரந்த நிலப்பரப்பைத் துண்டாடுதல் ஒருவழி. ஒவ்வொரு மொழி இனத்திற்கும் தன்னாட்சியுடைய மாநிலங்களை அமைத்து, மத்தியில் கூட்டாட்சி அரசை உடைய ஒரே நாட்டை அமைத்தல் மற்றொரு எளிதான வழி...

''நாங்கள் கேட்கின்ற தீர்வு இதுதான். தன்னாட்சி உடைய தமிழ் மாநிலம்; தன்னாட்சி உடைய சிங்கள மாநிலம்; இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவான மத்திய அரசு; இவற்றை உள்ளடக்கும் கூட்டாட்சி அரசியல் அமைப்பு. சிறியதான தமிழ்ப்பேசும் தேசிய இனம் அழிந்து போகாமலும், பெரியதான சிங்களத் தேசிய இனத்தால் விழுங்கப்படாமலும் இருப்பதற்குரிய மிகக் குறைந்த ஏற்பாடு இதுதான்''.

இதே கூட்டாட்சி முறையை ஆதரித்துத்தான் தமிழ் ஈழமக்கள் 1970இல் திட்டவட்டமாக வாக்களித்தனர்; தங்களை அடிமைப்படுத்தும் ஒற்றையாட்சி முறையை முற்றிலும் புறக்கணித்தனர். ஆனால், அவர்களின் இந்த உறுதியான பொதுவிருப்பத்தை (ஜெனரல்வில்) சிங்களர் புறக்கணித்தனர்.

www.tamilarangam.net

# தன்னாட்சியும் தனியாட்சியும்:

ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் நாட்டில், ஒரு தேசிய இனத்தின் உரிமையை மற்றொரு தேசிய இனத்தின் பெரும்பான்மையை வைத்து மறுக்கக் கூடாது என்பது அரசியல் பாலபாடம் ஆகும். ஜெர்மானியர், ஃபிரான்சுக்காரர், இத்தாலியர், ரோமனிசு ஆகியோர் வெவ்வேறு அளவில் வாழும் சுவிட்சர்லாந்து நாட்டில் வெவ்வேறு இனங்கள் ஒன்றுபட்டு வாழக் காரணம், அங்கு பெரும் எண்ணிக்கையில் உள்ள ஜெர்மானியருக்குத் தனி ஏற்றம் இல்லை; அனைத்து இனங்களுக்கும், மொழிகளுக்கும், மதங்களுக்கும் சமனியம் நல்கும் கூட்டாட்சி முறை அங்கு பின்பற்றப்படுகிறது.

கனடாவில் பத்து மாநிலங்கள் உண்டு. அதில் ஒரு மாநிலமாகிய கியூபெக்கில் மட்டும் ஃபிரான்சுக்காரர் மிகப் பெரும்பான்மை. அதன் காரணமாக ஃபிரான்சு மொழி, கனடா நாட்டில் இரண்டாம் நிலையில் இல்லை; ஆங்கிலத்துடன் சம உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கு மெய்யான கூட்டாட்சியில்லை என்பதால், பிரான்சு மக்கள் வாழும் கியூபெக் விடுதலையை விரும்புகிறது.

நீண்டகாலம் ஒரே நாடாக வாழ்ந்த நார்வே மக்களும், ஸ்வீடன்காரர்களும் முரண்பட்டபொழுது, அமைதியான முறையில் ஸ்வீடன் மற்றும் நார்வே எனும் தனித்தனி நாடுகளை அமைத்தனர்.

அதுபோலவே, 1919 முதல் 74 ஆண்டுகள் ஒன்றாகச் செகோஸ்லோவாகியா நாட்டில் வாழ்ந்த செக் இனத்தாரும், ஸ்லவக் இனத்தாரும், 1993 ஜனவரி முதல் நாளில் இருந்து, செக் குடியரசு, ஸ்லவக் குடியரசு என இருவேறு நாடுகளை அமைதியான முறையில் அமைத்துக் கொண்டனர்.

ஆக, நல்ல கூட்டாட்சி அமைப்பில், ஆதிக்கமற்ற சூழலில், வேறுபட்ட இனத்தவருக்கு இடையில் இணக்கம் நிலவினால், சுவிட்சர்லாந்தில் உள்ள மக்களைப்போல் ஒற்றுமையாக வாழலாம். மாறாக, ஆதிக்கப் போக்கின் காரணமாகப் பிணக்கு ஏற்பட்டால், நாகரிக முறையில் உள்நாட்டுப் போரைத் தவிர்த்துத் தனி நாடுகளை அமைத்துக் கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை தமிழர்கள், தந்தை செல்வா அவர்களின் தலைமையில், 1948-இல் இருந்து, 1972 வரை கூட்டாட்சி முறையில் அமைந்த, இன-மொழி-மதங்களுக்கு இடையில் சமனியம் உள்ள, ஓர் அரசியல் அமைப்பைக் கேட்டனர். ஆனால், பேரினவாத ஆதிக்கச் சிங்களர் இந்த நியாயமான கோரிக்கையை மறுத்து, தொடர்ந்து இனத் தாக்குதலை நடத்தினர். தங்களுடைய மேலாண்மையையும் தமிழரின் அடிமைத் தனத்தையும் உறுப்படுத்தும் வகையில் 1972 மே 22 இல் புதிய குடியரசை ஏற்படுத்தினர். அதன்படி, சிங்கள மொழிக்கும், பவுத்த மதத்திற்கும் ஏற்றம் அளிக்கப்பட்டது. தமிழரின் பாரம்பரியத் தாயகத்தைக் கையப்படுத்துவதற்குத் தோதான ஒற்றை அரசு நிறுவப்பட்டது; தமிழ் மண்ணில் சிங்களர் குடியறினர்.

தமிழருக்கான சமநிலை உரிமையையும், தாயகப் பாதுகாப்பையும் முற்றாகப் பறிக்க முற்பட்டுவிட்ட சிங்கள வெறியருக்கு, நாகரிகமான கூட்டரசு முறையில் நாட்டம் ஏற்படாது என்பதைத் 24 ஆண்டு காலபட்டறிவு ஈழமக்களின் தலைவர்களுக்கு உணத்திற்று. இந்தக் காலகட்டத்தில் விடுதலை ஒன்றே மாற்றுவழி என்பதைத் தெரிந்து அதற்கான காரியங்களில் இறங்கினர். 1972 அக்டோபர் 3 இல், தந்தை செல்வா, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். அதற்குமுன் அவர் மன்றத்தில் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்புடையது. அதன் சில வரிகளைக் காண்போம்: ''இந்நாட்டில், சென்ற 24 ஆண்டுகளாக (1948 முதல் 1972 வரை) நடந்தவற்றை மனதில் கொண்டு, தமிழர்கள் இங்கு ஒரு அடிமை இனமாக - அழிவதா அல்லது விடுதலை பெற்ற மக்களாக வாழ்வதா என்ற தமது வருங்காலத்தை முடிவு செய்யும் உரிமை அவர்களுக்கு வேண்டும் என்பதே என்து கொள்கை. விடுதலை பெற்ற மக்களாக வாழ வேண்டும் என்ற கொள்கைக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களை கேட்பேன்''

''இந்தக் கொள்கையில் அரசாங்கமே என்னோடு போட்டியிடட்டும். நான் தோல்வியடைந்தால் என் கொள்கையை விட்டுவிடுகிறேன். அரசாங்கம் தோல்வியடைந்தால் தனது கொள்கையையோ, அரசின் திட்டத்தையோ தமிழர்கள் ஆதரிப்பதாக மேற்கொண்டும் கூறக்கூடாது.''

செல்வா அவர்களின் காங்கேசன் துறைத் தொகுதியில் இடைத் தேர்தலை இரண்டு ஆண்டுகளுக்கு மேல், இலங்கையரசு ஒத்தி வைத்தது. பின்பு பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த ஒருவரைக் கூட்டணி வேட்பாளராக நிறுத்தி அவரை எதிர்க்கச் செய்தனர். ஆனால், அவரைவிட இரண்டரை மடங்கு வாக்குகள் அதிகம் பெற்று தந்தை செல்வா வெற்றிபெற்றார். மீண்டும் நாடாளுமன்றத்தில் இவ்வாறு முழங்கினார்: ''இலங்கையில் ஓர் ஆளப்படும் இனமாக வாழும் நிலையைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்கமாட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டார்கள். அடிமைத் தனத்திற்கு எதிராகப் புரட்சியில் இறங்குவார்கள்.... எங்கள் இனம் அழிவதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு ஒரு தனித் தமிழ் நாட்டை இங்கு நிறுவியே தீருவோம். தமிழ் மக்களின் குரலாக நின்றே இந்த அவையில் இதைக் கூறுகின்றேன்.

கூட்டரசு முறையை எவ்வாறு அறவழியில் வற்புறுத்தினார்களோ அவ்வாறே, விடுதலையையும் அமைதியான நடப்புகளின்மூலமே வலியுறுத்தினர். மாநாடுகள், கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள், தேர்தல் முதலியவற்றின் வழியே மக்களின் உறுதியான வேட்கையை வெளிப்படுத்தினர். அத்துடன் 1976 பிப்ரவரி 4-இல், இலங்கை நாடாளுமன்றத்தில் இருந்த 12 தமிழ் உறுப்பினர்கள், ஈழ விடுதலைக்கான தீர்மானத்தை முன்மொழிந்தனர். காங்கேசன் துறை, உடுவில், மூதூர், வவுனியா, திருக்கோணமலை, கோப்பாய், சாவகச்சேரி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, ஊர்க்காவல்துறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கையெழுத்திட்ட அத்தீர்மானம் அவையின் குறிப்பேட்டில் (ஷன்சார்டு) பதிவாகியிருக்கிறது. அதன் கடைசிப் பத்தி இது: ''காங்கேசன்துறை இடைத் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை, விடுதலை பெற்ற அரசுரிமை உடைய மதச் சார்பற்ற சமனிய நாடான தமிழ் ஈழத்தை அமைப்பதற்குரிய செயலுரிமையாக ஏற்றுக்கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது''

1976 மே 22 இல் சிங்களர் குடியரசு நாள் கொண்டாடினர். அதே நாளில், தமிழ் ஈழம் எங்கும் விடுதலை கோரும் அறிக்கையை தமிழர் தலைவர்கள் விநியோகித்தனர். அவர்களில், நாவலர் அ. அமிர்தலிங்கம், வ.ந. நவரத்தினம், க.பொ. இரத்தினம், க. துரைரத்தினம் ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்து அரசுத் துரோகக் குற்ற சாட்டினர். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மூவரின் முந்நிலையில், ரகசியமற்ற, வெளிப்படை விசாரணை (ட்ரயல் அட் பார்) முறையில் வழக்கு நடந்தது. தமிழ் ஈழ மக்களின் சட்ட - அரசியல் வரலாற்றில் நிலையான இடம் பெற்ற இந்த வழக்கில், மூத்த சட்டத்தரணிகளான சா.ஜே.வே. செல்வநாயகம் (செல்வா), ஜி.ஜி. பொன்னம்பலம், மு. திருச்செல்வம், வி.எஸ்.ஏ. புள்ளை நாயகம் ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டவர்களின் சார்பில் வாதிட்டனர். வரலாற்றை எடுத்துச் சொல்லியும், பல்வேறு நாடுகளில் அரசு ஆக்க முறைகளுக்கான முன்னேற்பாடுகளைச் சுட்டிக்காட்டியும், போர்ச்சுகீசியரிடம் 1619 இல் சங்கிலி மன்னன் இழந்த அரசுரிமையை (இறைமையை) புதிய குடியரசின் அரசியல் சட்டம் நடப்பிற்கு வந்த 1972 மே 22 இல் இருந்து, ஈழத் தமிழர்கள் மீளப் பெற்றவர்கள் என்பதை ஆணித்தரமாக நிறுவினர். அரசுத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை பெற்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ் ஈழத் தந்தை செல்வநாயகம் அவர்கள் 1977 ஏப்ரல் 26 இல் காலமானார். ஆனால், அவர் ஓடவிட்டிருந்த உரிமையுணர்வு வற்றவில்லை; பெருக்கெடுத்து ஓடியது. மலையகத் தமிழர்களையும் உட்படுத்தி அவர் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி (டி.யு.எல்.எஃப்) 1977 ஜூலையில் நடந்த பொதுத்தேர்தலில், ஈழ விடுதலையை முன் வைத்துப் போட்டியிட்டது. 19 தொகுதிகளில் 18-இல் வெற்றி பெற்றது. வள்ளுவரின் குறளின்படி, சாக்காட்டிற்கு (சாவிற்குப்)பின்னும், வித்தகராகிய (கற்ற அறிஞராகிய செல்வா அவர்கள் உளதாகும் (வாழ்ந்திருக்கும்) நிலையைப் பெற்றுவிட்டார். வேறுபாடுகளைப் பயன்படுத்தி, அதில் பிளவுகளை உண்டாக்கிச் சுரண்டும் தன்னலத்தார் போக்கை எதிர்த்து, ஈழத் தமிழர் இனத்தின் வெவ்வேறு பிரிவினரையும் ஒன்று திரட்டி, அவர்கள் விடுதலைப் பயணத்தில் தலைநிமிர்ந்து நடைபோட அடித்தளம் இட்ட பெரியவர் அவரே!

www.tamilarangam.net

# அறப் போரா? மறப்போரா?

ஒரு நாடு பிற நாட்டின்மீது வல்லாண்மை செலுத்துவது போலவே, ஒரு நாட்டிற்குள் ஓர் இனம் மற்றொரு இனத்தின் மீது ஆதிக்கம் செய்வதைக் காண்கிறோம். அரசியல் மேலாதிக்கம், பொருளாதாரச் சுரண்டல், சமுதாய உயர்வு - தாழ்வு, பண்பாட்டு முற்றுரிமை, வேற்று மொழி முதன்மை, நிலப்பறிப்பு முதலிய பலவடிவங்களில் ஆதிக்கம் தன்னை நிலைப்படுத்திக் கொள்கிறது.

ஆதிக்கத்தின் காரணமாக அழுத்தப்படுவோர், தங்கள் உரிமைக் கும் சமனியத்திற்கும் கிளர்ச்சி செய்வது இயல்பே! அறிவும் தெளிவும் பெற்றுவிட்ட மக்கள், மானவுணர்வுடன் எல்லாவகை யான மேலாண்மையையும் எதிர்த்துப் போராடவே செய்வர். போராட்டம் அல்லது கிளர்ச்சியின் வடிவம் - ஆதிக்கம் செய்வோ ரின் தன்மையைப் பொருத்தது. கிளர்ச்சி செய்யும் அழுத்தப்பட்ட மக்களின் நியாயங்களை ஏற்றுப் படிப்படியாக உரிமையை நல்கும் ஆதிக்கம், ஒரு வகையில் வரலாற்றுப் போக்கையும், நாகரிகத்தை யும் மதிப்பதாகக் கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் 1909, 1919, 1935 ஆகிய ஆண்டுகளில் இயற்றிய சட்டங்களின் மூலம், படிப்படியாக நாட்டுரிமையையும், மக்களாட்சியையும் அளித்தனர். இறுதியாக, 1947 இல் விடுதலை வந்தது. பொருளாதாரச் சுரண்டலில் அவர்கள் குறியாக இருந்தனர். இருப்பினும், எழுச்சி பெற்ற மக்களின் நியாயங்களை முறித்துச் சிதைத்து அவர்களை வதைப்பதே வழியென அவர்கள் ஆட்சி செய்யவில்லை.

இலங்கைத் தமிழர்களை ஒடுக்க முற்பட்டுள்ள பேரினவாதச் சிங்கள ஆதிக்கம், மக்களின் நியாயமான உரிமைகளையோ, அமைதியான கிளர்ச்சிகளையோ, நாகரிக வரலாற்றுப் போக் கையோ, ஒப்பந்தங்களின் மூலம் அளிக்கும் உறுதிமொழிகளையோ மதிப்பதே இல்லை. வல்லாதிக்கத்தை எதிர்த்து நடத்தும் மக்கள் நாயக முறையில் அமைந்த அறவழிப் போராட்டங்களை அரசு வன்முறையின் மூலமாகவுகம், காடையர்களைக் கொண்டு இனத் தாக்குதல் நடத்தியும் அடக்குகிறார்கள். ஈழத் தமிழர்களின் நியாய மான உரிமைகளை மறுத்து, நிலையாக அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக வைத்திருக்க, வஞ்சகச் சூழ்ச்சிகளிலும், காட்டு

www.tamilarangam.net
விலங்காண்டித்தனமான நடவடிக்கைகளிலும் சிங்கள வெறியர்கள் ஈடுபடுகிறார்கள் என்பது 1948 இல் இருந்து தொடரும் வரலாறு.

அதைச் சுருக்கமாக நினைவுபடுத்துகிறோம்.

ஆங்கிலேயர் 1948 இல் வெளியேறிய பொழுது, பெருந்தோட்டப் பணியாளராக இருக்கும் மலையகத் தமிழர்களுக்கு வாக்குரிமையும், குடியுரிமையும் இருந்தன. ஆனால், அவற்றை 1948-49 இல் பறித்தனர். முதலில் பிரதமர் ஆனவர், டான் ஸ்டீபன் சேனநாயகா; அடுத்து வந்தவர் சர் ஜான் கொதலவாலா. இவர்கள் காலத்தில், உறுதியான நிலையெடுத்துச் சர்வதேச வழக்கப்படி, இந்திய வம்சாவழியில் வந்த இலங்கை மலைத் தோட்டத் தமிழர்களுக்குப் பண்டித நேரு நியாயம் செய்திருக்கலாம். காஷ்மீர் விஷயத்தில் காட்டிய அக்கறையை இங்கு காட்டவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்தானே!

1956-இல் சிங்கள மொழி ஆதிக்கச் சட்டத்தைச் சாலமன் பண்டார நாயகா கொண்டு வந்தார். அதை எதிர்த்து அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தமிழர்களை இரத்தம் சொட்டும் அளவிற்குத் தாக்கினார். கிளர்ச்சி தொடரவே, செல்வா - பண்டா ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், அது நடப்பிற்கு வரவில்லை. மாறாக 1958 இல் தமிழர்கள் தாக்கப்பட்டனர். சிங்களர் பகுதியிலிருந்து விரட்டப்பட்டார்கள். அப்பொழுது, அனைத்தும் இழக்க ஏதிலியாய்ப் பருத்தித்துறையில் வந்து இறங்கிய அக்காவைக் கண்டு, எட்டு வயதுச் சிவக்குமரன் என்னும் பிஞ்சு நெஞ்சில், புரிந்துகொள்ள முடியாத வேதனை சூழ்ந்தது.

ஒப்பந்தத்தைக் காற்றிலே பறக்க விட்டதோடு, பொது நிருவாகத்தில் மட்டுமின்றி, தமிழர் பகுதிகள் உள்ளிட்ட அனைத்து நீதிமன்றங்களிலும் சிங்களத்தை ஆதிக்க மொழியாகத் திணித்த போது, மீண்டும் கிளர்ச்சி வெடித்தது. அடக்கு முறையும் ராணுவ ஆட்சியும் தொடர்ந்தன. 1961 ஏப்ரல் மாதத்தில் ராணுவத்தால் தாக்கப்பட்ட அறப்போராளிகளில், சிவக்குமரனின் தாயும் ஒருவர்!

கிளர்ச்சியாளர்களின் நியாயங்களை மறுப்பது, உறுதிமொழிகளையும், ஒப்பந்தங்களையும் புறக்கணிப்பது, பெண்கள் உள்ளிட்ட அறப்போராளிகள் மீது அரசு வன்முறையைக் கட்டவிழ்த்துவிடுவது, அவ்வப்பொழுது, வெறித்தனமான இனத் தாக்குதல்கள் நடத்தி, தமிழ் ஈழம் அல்லாத பகுதிகளில் வாழும் சிறுபான்மைத் தமிழர்களின் உயிரைக் குடிப்பது, உடைமைகளைப் பறித்து ஏதிலிகளாய் விரட்டியடிப்பது முதலிய சிங்கள ஆதிக்க அரசின் கொடுமையிலிருந்து காத்துக்கொள்ளவும், உரிமைகளைப் பெறவும், பறிபோகும் பாரம்பரிய மண்ணைக் காக்கவும், கருவி ஏந்திய கட்டுப்பாடான மறப்போரே மாற்றுவழி எனும் முடிவுக்குச் சிவக்குமரன் போன்ற இளைஞர்கள் தள்ளப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மறவழிப் போராட்டம் ஏன்?

1948-இல் இலங்கை விடுதலை பெற்றதிலிருந்து 1972 இல் புதிய அரசியல் அமைப்பின் கீழ் அது குடியரசான வரை உள்ள காலத்தை, அந்நாட்டில் வஞ்சகமாக ஒடுக்கப்படும் தமிழர் நடத்திய உரிமைப் போரின் முதற்கட்டம் எனலாம். அதைத் தொடர்ந்து ஒரு திருப்பம் ஏற்பட்டது. முதலாவதாக, 1948 ஆம் ஆண்டு (சோல்பரி) அரசு அமைப்பில் உள்ள 29 (2), (3) பிரிவுகளின்படி கிடைத்து வந்த சிறிய பாதுகாப்பையும் கூட 1972 ஆம் ஆண்டுக் குடியரசுச் சட்டம் பறித்துவிட்டது; கலப்பற்ற சிங்களப் பேரின ஆதிக்கம் உறுதியாயிற்று. இரண்டாவதாக, அதுவரை உரிமைப் போருக்கெனக் குரல் கொடுத்தவர்களுக்கு, மக்களாட்சி முறையிலான கிளர்ச்சிகளில் நம்பிக்கையிருந்தது. ஏனென்றால், ஆதிக்கக் கூறுகளை, நாடாளு மன்ற அரசு முறையில், படிப்படியாக அகற்றிக்கொண்ட ஆங்கிலேயரின் நாகரிக நடத்தையைப் பழைய தலைமுறையினர் கண்டிருந்தனர். ஆகையால், ஒன்றுபட்ட மக்களின் உறுதியான கிளர்ச்சியின் மூலம் நியாயங்களைப் பெறலாம் என நம்பி, அவ்வழியைப் பின்பற்றினர். ஆனால், நேர்மையும் நாகரிகப் பார்வையும் அற்ற சிங்கள ஆதிக்கத்தின் கொடிய அடக்குமுறையின்கீழ் அத்தகைய அறவழிக் கிளர்ச்சிகள் தோற்றுப் போனதைப் புதிய தலைமுறை கண்டது. 1940 -களிலும், அதற்குப் பின்பும் பிறந்த இளைஞர்கள் ஆங்கில ஆட்சியின் கீழ் நடக்காத கொடிய அடக்கு முறைகளைக் கண்ணுற்று, அறவழிக்கு மாற்றாக மறவழியை நாட வேண்டியவர் ஆயினர்.

மூன்றாவதாகத் தமிழரின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை ஏற்று, அதைச் சிங்களப் பாமரருக்கு விளக்கி ஆரோக்கியமான முற்போக்கு அரசியல் நடத்த எந்தக் கட்சியும் முன்வரவில்லை. பொதுவுடைமைக் கொள்கையினர் 1948-இல், மலையகப் பெருந்தோட்டத் தமிழத் தொழிலாளிகளின் ஆதரவு பெற்று நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததால், அவர்களின் குடியுரிமைப் பறிப்புச்சட்டத்தை எதிர்த்தனர். ஆனால், அதே பொதுவுடைமையினர், 1972 இல் சிங்களப் பேரின ஆதிக்கத்திற்கு ஒத்துழைத்தனர். அவர்களின் இனவெறி, வர்க்க உணர்வை மீறி நின்றது. இலங்கைப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் பீட்டர் கெனமன், இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாசக் கட்சித் தலைவர்கள் என்.எம். பெரேரா, டாக்டர் கால்வின் றெஜினால்டு த சில்வா முதலியவர்கள், தமிழினத்திற்குச் சமனியம் நல்கும் கூட்டரசு முறையை மறுத்து, அவர்களை ஒடுக்கும் ஒற்றையாட்சி முறையைப் புகுத்தச் சிறிமாவோவின் சுதந்திரக் கட்சிக்கு முழு ஆதரவு கொடுத்தனர். இவ்வாறு சிங்களரில் அனைத்துப் பிரிவினரும் பேரின ஆதிக்க ஆசைக்கு இரையாயினர். இதனால், மேலும் மேலும் தமிழரின் வாழ்நிலை மோசமடைந்ததேயன்றி, நன்னிலை அடைவதற்கான அடையாளமே தென்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான்காவதாக, தமிழ் ஈழப் பகுதிகளிலும், சிங்களர் செல்வாக்கை நிலைநாட்டுவதற்காகத் திட்டமிட்ட வகையில் அரசு ஆதரவுடன் அவர்களை அங்கு குடியேற்றினர். ஈழவரின் பாரம்பரிய நிலம் படிப்படியாகச் சுருங்கியது.

இவ்வாறான போக்குகளுக்குத் துணையாகச் சிங்களப் படையினர், காவலர், காடையர் ஆகியோர் மிரட்டலிலும், வன்முறையிலும் ஈடுபட்டனர். ஆகையால் தற்காப்பிற்கும், உரிமைப் போரை முன்னெடுத்துச் செல்லவும் கருவி ஏந்திய மறவழிப் பாதையை இளைஞர் தேர்ந்தெடுத்தது தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.

## துயரில் முடிந்த மாநாடு

அடுத்தடுத்து ஏற்பட்ட வெறித்தனமான அரசு வன்முறையைத் தடுக்கவே ஆயுதம் தாங்கிய போராளிகள் உருவாயினர். ஒரு நிகழ்ச்சியைக் காண்போம்: மலேசியாவின் கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாடு கூட்டிய - மறைந்த பேராயர் தனிநாயக அடிகள் ஓர் ஈழத் தமிழர். அவருடைய மண்ணான யாழ்ப்பாணத்தில் 1974 ஜன. 3 இல் தொடங்கி 10 முடிய நான்காவது மாநாடு நடந்தது. அது தொல்லைகளுக்கு இடையே தொடங்கி, இன்பமாய் நடந்து, துன்பமாய் முடிந்தது. அந்த மாநாட்டைக் கொழும்புவில் நடத்த அப்பொழுது அதிகாரத்தில் இருந்த சிறிமாவோ அம்மையார் கூறினார். அதை மறுத்து யாழ்ப்பாணத்தில் நடத்தியதால் சிங்கள அரசு இடையூறுகள் பல செய்தது. அவற்றை முறியடித்து வெற்றிகரமாக நடத்தி மாநாட்டின் எட்டாம் நாளில், இறுதி நிகழ்ச்சிகளில் ஒன்றாக, திருச்சிராப்பள்ளிப் பேராசிரியர் நயினார் முகமது அவர்களின் இனிய இலக்கிய பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தனர். மாநாட்டின் வெற்றியை விரும்பாத சிங்களக் காவலர்கள், கையாட்களைக் கொண்டு மின் கம்பிகளைத் துண்டித்தனர். எங்கும் இருள் சூழ்ந்தது. மின்சாரம் தாக்கி மக்கள் துடித்தனர்; மயங்கினர்; குண்டாந்தடிகள் சுழன்றன; துப்பாக்கிகள் வெடித்தன. பெண்களும் குழந்தைகளும் ஓலமிட்டு ஓடினர். பெருமளவில் குவிக்கப்பட்டிருந்த சிங்களக் காவலர்கள் கொக்கரித்தனர். காட்டுவிலங்கினராய்த் துயில் உறிந்த அவர்களை உதறித் தள்ளி, உள்ளாடையுடன் தலைவிரி கோலமாய்த் தாய்மார்கள் தப்பினர். புயலாய்ச் சுழன்ற தொண்டர்கள் முடிந்த அளவிற்கு விழாவிற்கு வந்தவர்களைக் குண்டர்களிடமிருந்து காத்தனர். இரவெல்லாம் எங்கோ மறைந்து உயிர் பிழைத்த மக்கள் விடியுமுன் வீடுநோக்கிக் கண்ணீர் மல்கச் சென்றனர்.

பகலவன் எழுந்தான்; மாநாடு நடந்த யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் ஒளி படர்ந்தது. நொறுங்கிய மிதிவண்டிகள்; கிழிந்த ஆடைகள்; சிதறிய செருப்புகள்; சிந்திய குருதி; துப்பாக்கிச் சூட்டில் மாண்டவர் ஏழுபேர்; நெரிசலில் சிக்கி இறந்தவர் இருவர். முடிந்தது மாநாடன்று, ஒன்பது பேரின் வாழ்வு!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாற்றிலே வழுக்கி விழுந்தவர்கள் மொழிக்கு விழா எடுக்கலாமா? நிகழ்காலத் தாழ்வை ஏற்றவர்கள் பழங்காலப் புகழைப் பேசலாமா? அடிமைகள், இயல் இசை, நாடகம் என முத்தமிழ் முழங்கலாமா? எண்ணங்கள் அலைமோதின. விழா எடுத்த மகிழ்ச்சியில் வீட்டிலே ஓய்வெடுக்க நினைத்தவர்கள் விடுதலைக்கு வழிதேட விரைந்தனர்.

ஏற்கனவே, 1958 இல் இனத் தாக்குதல், 1961 இல் ராணுவ ஆட்சி ஆகிய காலங்களில் தமக்கைக்கும், தாய்க்கும் நடந்த அவலங்களை அறிந்திருந்த சிவக்குமரன், மாநாட்டில் மக்கள் வதைபட்டதையும் மாண்டதையும் பார்த்து வெதும்பினான். வெறியாட்டத்திற்குக் காரணமான சந்திரசேகரா என்ற சிங்கள அதிகாரியை வீழ்த்தத் தேடியலைந்தான். அந்நிலையில் காவலரால் சூழப்பட்டான்; எதிரியின் பிடியில் சிக்க விரும்பாமல் நஞ்சுண்டு மாண்டான். 1950 ஆக. 26 இல் பிறந்து, 1974 ஜூன் 5 இல் மறைந்த, பொறியியல் படித்துக்கொண்டிருந்த அவ்விளைஞனைக் குறித்து

''சாவைத் தானேற்றுத் தமிழர்
வாழ்வில் உயிர் ஒற்றிய
சிங்கத் தமிழன் சிவக்குமாரன்''

எனக் கவிஞர் காசியானந்தன் பாடினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடக்கு முறைத் தொடர்கள்

ஈழத் தமிழர்களின் உரிமைகள், நியாயங்கள், நேர்மை உணர்வுகள் ஆகியனவற்றை முற்றாகப் புறக்கணிப்பது சிங்களப் பேரினவாதக் கொள்கையாக் முதிர்ந்து நின்றது. சிங்களவரின் தயவில் பிழைத்திருக்க ஒத்துக்கொண்டால், ஒருவகையான அடங்கிய அமைதியில் அவர்களை வாழ விடுவது; அதற்கு மாறாக மானமுள்ள சமனிய வாழ்வை நேசித்தார்கள் எனில், அரசு வன்முறையால் தமிழர்களை அநாகரிகமாக ஒடுக்குவது என்கிற செயல்முறை கொழும்புவில் ஆட்சிக்கு வருவோரின் வழமை ஆயிற்று.

1970 இல் சிறிமாவோ ஆட்சிக்கு வந்த பின்பு, தரப்படுத்தல் முறையைக் கொண்டுவந்தார். அதன்படி, உயர்படிப்புக்குச் சிங்களரைவிடத் தமிழ் மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறவேண்டும். அத்துடன் அமைச்சரே தெரிவு செய்யும் அதிகாரமும் பெற்றார். இந்நடவடிக்கைகளால், தமிழரின் எண்ணிக்கைக்கு மிகக் குறைவான விகிதத்திலேயே மேற்படிப்புக்கான இடங்களை அவர்களுக்கு ஒதுக்கினர். இவ்வநீதியால் தாக்குண்ட இளைஞர்கள், தமிழ் மாணவர் பேரவை அமைத்து மக்கட்தொகை விகிதத்துக்குத் தக இடம் கேட்டுக் குரல் எழுப்பினர்.

யாழ்ப்பாணத்தில் 1974 இல் நடந்த நான்காம் உலகத் தமிழ் மாநாட்டில் காவல் துறையின் தகாத நடப்பால் ஒன்பது பேரின் சாவிற்குக் காரணமாயிருந்த துணை மேல் அதிகாரி தண்டிக்கப்பட்டிருக்கவேண்டும்; ஆனால், அவர் பதவி உயர்வு பெற்றார்.

மாநாட்டில் உயிரிழந்தவர்களுக்கு நினைவுக் கற்களை நாட்டினார்கள்; அவற்றைக் காவலர்கள் உடைத்து வீழ்த்தினர். தமிழர்களின் சமுதாய் உணர்வு எந்த வகையில் வடிவம் பெற்றாலும், அதைக் கண்டு சிங்களர் மருண்டனர்; சீற்றம் கொண்டு தகாதன செய்தனர். புத்தனம் எனும் இடத்தில், 1976 பிப்ரவரி 2 இல் பள்ளிவாசலில் தொழுதுகொண்டிருந்த இசுலாமியத் தமிழர் எழுவர் காவலரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். அதைத் தொடர்ந்த கலவரத்தில் மேலும் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாயினர். கடைகள் சூறையாடப்பட்டன; வீடுகள் கொளுத்தப்பட்டன. இந்தச் செய்கைகளைக் கண்டிக்காததால், கொழும்பு நகரில் உள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நகரப் பள்ளிவாசலில் தொழுகை நடத்திய மூவரைச் சுட்டு முத்துட துணிவைச் சிங்களக் காவலர் பெற்றனர்.

நல்லூர் முருகன் கோயிலில் பரராசா எனும் இளைஞர் வழிபாட்டிற்குப் பின் திரும்பிக் கொண்டிருந்தார். அவரை 1976 ஆகஸ்ட் 10 இல் சுட்டுச் சாய்த்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி, அஃது ஒரு நியாயம் காட்ட முடியாத கொலையெனத் தீர்ப்பளித்து, குற்றத்திற்குக் காரணமான காவலரை விசாரணைக் கைதியாக வைக்க உத்தரவிட்டார். ஆனால், சிங்கள வெறியரசு அவரை விடுவித்தது; இன வெறியர்கள் அவருக்கு 'வீர' வரவேற்புக் கொடுத்தனர்.

கொழும்பு முகத்துவாரத்தில் உள்ள ஒரு தேவாலயத்தில் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் தமிழில் வழிபாடு செய்வதைச் சிங்களக் குண்டர்கள் தடுத்தனர்; காவலர் தலையிட்டுச் சட்டத்தை நிலை நாட்ட மறுத்தனர்.

பிற்காலத்தில் ஈழத் தமிழர்மீது ஏவப்பட்ட பெரும் அளவிலான ராணுவ நடவடிக்கைகளுடன் இவற்றை ஒப்பிட்டால், சிறிய நிகழ்ச்சிகளாகத்தான் தோன்றும். எனினும், எதிர்காலப் போக்கினைச் சுட்டும் தெளிவான அடையாளங்களாகவும், எதிர்கொள்ள வேண்டிய கொடிய பெருந்தாக்குதலைச் சுட்டும் எச்சரிக்கைகளாகவும் இவை அமைந்தன எனலாம்.

## இனக் கொலைஞன் ஜெயவர்தனா:

1970 இல் ஆட்சிக்கு வந்து, 1972 இல் மொழி, மத, பேரின ஆதிக்கத்திற்கு அடித்தளமாக அமைந்த புதிய அரசியலமைப்பை உண்டாக்கி, 1974 இல் உலகத் தமிழ் மாநாட்டைக் குலைத்து, நாட்டின் மொத்த நலனை விட, சிங்கள மேலாண்மையிலேயே அதிக நாட்டம் செலுத்திய சிறீமாவோவின் சுதந்திரக் கட்சி, அதன் கூட்டாளிகளான இடதுசாரிக் கட்சிகளுடன், 1977 ஜூலை தேர்தலில் பெருந்தோல்வி கண்டு, முக்கிய எதிர்க்கட்சியாகக்கூட வர முடியவில்லை. முந்தைய நாடாளுமன்றத்தில் 116 இடங்களைப் பெற்றிருந்தவர்கள், இப்பொழுது எட்டு இடங்களையே பெற முடிந்தது. ஜே.ஆர். ஜெயவர்தனே தலைமையில் அய்க்கிய தேசியக் கட்சி (யு.என்.பி.) 140 இடங்களைப் பெற்று ஆட்சிக்கு வந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி 18 இடங்களைப் பெற்று முதன்மை எதிர்க்கட்சி ஆயிற்று.

இலங்கை முழுதும் சிங்கள மேலாதிக்கம் இருக்கவேண்டுமென விரும்பிய இன வெறியருக்குத் தமிழரின் கட்சி, முக்கிய எதிர்க்கட்சியானதும், அதுவரை ஆட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி (எஸ்.எல்.எஃப்.பி) வலிமை குன்றியதும் பெருத்த ஏமாற்றம் அளித்தது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக வந்துவிட்டதால், தமிழர்களுக்கு ஏற்பட்ட செல்வாக்கைக் குலைக்க இனக் கலவரத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைத் தூண்டிவிட முடிவு செய்தனர். இலங்கைக் காவல் துறையில் 17,000 பேர் இருந்தனர். அவர்களில் 5,000 பேருக்கு மேல் சிறீமாவோ அரசால் நியமிக்கப்பட்டவர்கள்; சிங்கள வெறி மிக்கவர்கள்; இனக் கலவரத்தைத் தொடங்கியதில் அவர்களுக்கு முதல் இடம் உண்டு!

யாழ்ப்பாண மருத்துவமனையில் புற்றுநோய்ப் பிரிவை ஏற்படுத்த நிதி திரட்டும் பொருட்டு களியாட்டு விழா (கார்னிவல்) ஒன்று நடத்தினர். சிறப்பாக நடந்த அவ்விழாவைக் குலைக்கும் பொருட்டு, 1977 ஆக. 12, 13 ஆகிய நாட்களில் சீருடையணியாத காவலர்கள் முறைகேடாக நடந்துகொண்டனர். பொதுமக்களுக்கும், அவர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அதில், சாதாரண உடையில் இருந்த காவலர் இருவர் காயமடைந்தனர். இதைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 14 முதல் யாழ்ப்பாணத்தில் காவலரின் காட்டாட்சி தொடங்கிற்று. ஏதுமறியாப் பொதுமக்கள் தாக்குண்டனர். லாரி, கார் முதலியன அடித்து நொறுக்கப்பட்டன. தெருவில் செல்வோர் மட்டுமன்றி, வீட்டிற்குள் இருந்தவரையும் அடித்து மிரட்டினர். சாதாரண உடையணிந்த காவலர்கள் யாழ்ப்பாணக் கடை வீதிகளில் தீ வைத்தனர்; மின் விளக்குகளை உடைத்தனர். சாதாரண உடையில் வந்து திரு(தீ) விளையாடல் செய்த காவலரை, சீருடையில் வந்தவர்கள் லாரி ஒன்றில் பாதுகாப்பாக ஏற்றிச் செல்வதைக் கண்ட பொதுமக்கள் மனம் நொந்தனர். தமிழ்க் கடல் எனப் போற்றப்படும் சோமசுந்தரப் புலவரின் சிலை உடைக்கப்பட்டதைப் பார்த்து வெகுண்டனர்.

அப்பாவி மக்களைத் தாக்கும் போக்கைக் குறித்து புகார் செய்யச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டவர்களைக் காவல் துறை புறக்கணிப்புடன் நடத்தியது; சில நேரங்களில் துப்பாக்கியை நீட்டியும், அடித்தும் அவர்களையே மிரட்டியது. காவலரின் அத்துமீறல்களால் ஆத்திரமடைந்த இளைஞர்கள், அவர்கள் சிலரைத் திருப்பித் தாக்கினர். சிங்கள மாணவர்களையோ, வேறு பணியாளர்களையோ எவ்விதத் தொல்லைக்கும் ஆளாக்கவில்லை. ஆனால், வேண்டுமென்றே வதந்திகளைப் பரப்பி, யாழ்ப்பாணத்தில் சிங்களருக்கு ஆபத்து என இலங்கை முழுதும் பொய்யைத் தூவி, தமிழர்மீது எல்லா இடங்களிலும் தாக்குதலை ஏவினர்.

1977 ஆகஸ்ட் 17 இல் கலவரம் படர்ந்தது. கொழும்பு சென்று பிரதமரைக் காண யாழ்ப்பாண விமான நிலையத்தில் நின்றிருந்த அமிர்தலிங்கத்திடம் சிங்கள டி.அய்.ஜி. இவ்வாறு கூறினார். ''அனுராதபுரம் வரை கலவரங்கள் பரவியுள்ளன. நாளை கொழும்புக்கும், பிற இடங்களுக்கும் பரவும். 1958-அய்விட இம்முறை மோசமாக இருக்கும்!'' சிங்களர் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகள் மட்டுமன்றி, தமிழர் பகுதிகளிலும், ராணுவம், காவல் துறை ஆகியவற்றின் துணையுடன் காடையர்கள் அட்டகாசம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரிந்தனர். குருநாகல், மாத்தளை, பாணந்துறை,
கெக்கிராவை, நொச்சியாகம், கல்கமுவே, மீகன்னாவ, தம்புளை
மலை, காகட்ட கஸ்கெலியா, தம்புட்டே கம, திருகோ
கிரியுல்லா, மகோ, பொல்காவலை, தெகிவளை, குளியாப்பிட்ட
மீரிகம, பொலநறுவை, மட்டக்களப்பு, வவுனியா என்ற பேரிய கொடை
நாடு முழுதும் இருந்த ஊர்களில் தமிழர் அவலகத்திற்கு வகையி
னர். அடக்குவார் இன்றிச் சிங்களர் ஆடினர். ஆட்பட்ட
கடைகளையும் சூறையாடினர்; தீ வைத்தனர்; வீடுகளையும்,
விரட்டினர்; கொன்றனர்; கொள்ளையடித்தனர்; இடித்தனர்; அடித்து
குத்தினர்; வெட்டினர். தமிழன் தன்னுடைய கற்பழித்தனர்;
நிகழக்கூடாது என நினைப்பதெல்லாம் பகைவனுக்குக்கூட
அவனுக்கு நிகழ்ந்தன.

## மேலும் மேலும்:

ஆட்சிக்கு வந்தவுடன் இனக் கொலையைத் தொடங்கி வைத்த
செயவர்தனேயின் தலைமையில் அடக்குமுறைப் போக்கு தீவிரமா
யிற்று. 1972 ஆம் ஆண்டு அரசமைப்பைவிட மோசமான ஒன்று
1978 செப்டம்பர் 7 இல் நடப்பிற்கு வந்தது. 1979 இல் பயங்கரவாதத்
தடுப்புச் சட்டம் என்ற பெயரில் அரசு வன்முறைக்குத் துணை
போகும் சட்டம் நிறைவேறிற்று.

அமைதி காணாதவராகவும், சிங்களரின் தாக்குதலில் இருந்து
சட்டத்தின் காப்பினைப் பெறாதவராகவும், தொடர்ந்து நெருடிக்க
டியான சூழலில் வாழவேண்டியவராகவும் தமிழ் இன மக்கள்
நிரந்தரமாக ஆக்கப்பட்டனர்.

1981 இல் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் யோகேசுவர
னின் வீடு முழுதும் நாசமாக்கப்பட்டது; மனைவியோடு, கட்டிய
துணியுடன் உயிர் தப்பியதே பெரும்பாடாயிற்று. யாழ்ப்பாண
நூலகத்தை எரித்து, என்றைக்கும் மீட்க முடியாத அறிவு வளத்தை
அந்த ஆண்டில்தான் அழித்தனர். நாகரிகமற்ற காட்டு விலங்காண்டி
கள் பழங்காலத்தில் செய்ததை இந்த நூற்றாண்டில் சிங்கள
இனவெறியர்கள் செய்தனர். 1930-களின் தொடக்கத்தில் ஜெர்மன்
அரசு அஞ்சல் தலை வெளியிட்டுப் பெருமை செய்யும் அளவிற்கு
மொழிப் புலமை பெற்றிருந்த அறிஞர் ஞானப்பிரகாசரின் மாணவர்
அருள் தந்தை டேவிட் என்பவர். 32 மொழிகள் தெரிந்த புலவர்
ஈடு செய்ய இயலாத நூலகம் எரிந்த செய்தியால் அதிர்ச்சியுற்
இறந்தார்! அந்த ஆண்டில் மீண்டும் தமிழர்கள் அகதிக
விரட்டப்பட்டனர். அதிகாரிகள், அலுவலர்கள், ஆய்வாள
மருத்துவர், பொறியாளர், வழக்குரைஞர், வணிகர்,
பட்டறைப் பாட்டாளி, பெருந்தோட்டத் தொழிலாளி,
முதலிய பல்வகை நிலைகளில் இருந்த தமிழர் அனைவ
பாதிப்புக்கு உள்ளாயினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவற்றிற்கெல்லாம் உச்சக்கட்டமாக 1983 ஜூலை, ஆகஸ்டு இனக்கொலை அமைந்தது. இதில் சுமார் 3000 தமிழர்கள் உயிரிழந்த னர். மூன்று லட்சத்திற்கும் அதிகமானோர் ஏதிலிகள் ஆயினர். குட்டிமணி, ஜெகன், தங்கதுரை முதலிய விடுதலைப் போராளிக ளும், டாக்டர் ராஜசுந்தரம் போன்ற பொது ஊழியர்களும் சிறையிலே சித்திரவதைப்பட்டு, வெலிக்கடைச் சிறையில் 53 பேரும், யாழ்ப்பாணச் சிறையில் அய்ந்து பேரும், ஆக மொத்தம் 58 பேர் மாண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராளிகள் தோற்றம்

இவ்வாறெல்லாம் இருக்கும் மனித நேயம் அற்றதும்
மனித உரிமையை மறுப்பதும் ஆன கொடும் பகைச் சூழலில்
இருந்து, தமிழ் மக்களையும், மண்ணையும் மீட்க இளைஞர்கள்
கருவி ஏந்திய போராளிகளாக மாறினர். தமிழ் ஈழத்தை வென்றெ
டுப்பதை இலக்காகக் கொண்டனர். பல்வேறு குழுக்களாக அவர்
கள் உருவானதென்பது பின்னால் வருத்தம் தரும் விளைவுகளை
ஏற்படுத்தியது. இன எதிரிகள் பிளவுகளை ஏற்படுத்தி, அவர்களி
டையே மோதலை உண்டாக்க இடம் ஏற்பட்டுவிட்டது.

எண்ணிப் பார்க்க இயலாத ஈகங்களையும், கடுமையான தாக்கு
தல்களையும், எதற்கும் அஞ்சாத துணிவையும், மறக்க முடியாத
சாகசங்களையும் வரலாற்றின் அழியாத பெருமைமிக்க சுவடுகளாக
ஆக்கிவரும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உரிமைப் போரின்
ஒப்பற்ற தலைமக்களாவர். இலங்கைத் தமிழர்களை நிலையாகத்
தாழ்த்தி வைக்கும் 1972 ஆம் ஆண்டு, அரசமைப்பு உருவான
அதே ஆண்டில், தமிழ்ப் புதுப் புலிகள் தோன்றினர். அதுவே
1976 இல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் பெற்றது.
கட்டுப்பாடும், கடமையிற் கருத்தும், கடினமான பயிற்சியும்
உடைய போர்ப் படையைத் தம்பி. பிரபாகரனின் பேராற்றல்
உருவாக்கியது. 1972 இல் நடப்பிற்கு வந்ததை விடப் பிற்போ
கான அரசியல் சட்டத்தை 1978 செப்டம்பர் 7 இல் செயவர்த்தே
கொண்டு வந்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அடையாளம
அதே நாளில், இலங்கை அரசுக்குச் சொந்தமான அவ்ரோ விமா
தைப் புலிகள் தகர்த்தனர்.

## கருவி ஏந்திய கடுஞ்சமர் ஏன்?

நவீன உலகின் நாகரிகக் கூட்டாட்சி முறையைக்
மூடிக்கொண்டு ஒப்புக்கொள்ள மறுத்தனர்; மிகத் ெ
காலந்தொட்டு வாழும் ஈழத்தின் தமிழ்ப் பகுதிகளைப்
கச் சிங்களர் குடியேற்றத்தைக் கொண்டு பறித்தனர்;
சமனிய உரிமைகளைக் கேட்கும் தமிழரை அரசின்
பயன்படுத்தி அடக்கினர். இடர்களைத் தாங்கிக்கெ
யில் போராடி ஓரளவேனும் உரிமைகளைப் பெறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கச் செய்துகொண்ட ஒப்பந்தங்களை வெட்கமின்றி வெற்று ஆக்கினர். தமிழருக்கு அல்லவை செய்வது சிங்களருக்கு [illegible]யாகும் எனும் பொல்லாத பாதையில் தொடர்ந்தனர். [illegible]யில், கருவியேந்திக் களத்தில் நிற்கவேண்டிய கட்டாயம் இளைய[illegible]ருக்கு ஏற்பட்டுவிட்டது. குடிகளைக் காக்கவேண்டிய காவல் நாயாக அரசு இருக்கவேண்டும்; அதுவே நிதானம் அற்ற வெறி நாயாக மாறிவிட்டால், மக்களுக்கு ஒரு கடுமையான காப்பு வேண்டுமல்லவா?

1956 இல் அறப்போர் தொடங்கிய காலந்தொட்டு, வெவ்வேறு காலகட்டங்களில் அடக்குமுறையையும், இனத் தாக்குதலையும் சிங்கள அரசு சிறிதும் கூச்சம் இன்றி ஏவிவிட்டது என்பதை ஏற்கெனவே கண்டோம். 1970-களின் பிற்பகுதியில் மறப்போர் தொடங்கிய பின்பு, போராளிகளின்மீது இல்லாததும், பொல்லாததும் சொல்லி மக்களை மயக்குவதும், உலகை ஏமாற்றுவதும் ஒரு கலையாகப் பின்பற்றப்படுவது மிகவும் வருத்தத்திற்கு உரியதும், கண்டிக்கத் தக்கதும் ஆகும். 1983 ஜூலை 23 இல் தொடங்கிய தமிழ் இனப் படுகொலைக்குக் காரணம் யாழ்ப்பாணத்தில் சிங்களச் சிப்பாய்கள் 20 பேர் கொல்லப்பட்டதுதான் எனப் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால், இரண்டு வாரங்கள் கழித்து, ஆகஸ்ட் 8 இல் பிரிட்டிசு ஒலிபரப்பு இணையத்தின் (பி.பி.சி.) நிருபரிடம் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனே உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இன வன்முறை தொடங்குவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே, ஜூலை முதல் வாரத்தை அடுத்து, கலவரத்தைத் தூண்டும் நோக்கில் தமிழருக்கு எதிரான உணர்வுடன் ராணுவம் கட்டுக் கடங்காமல் நடந்துகொண்டது. இந்த செய்தியை வேண்டுமென்றே (டெலிபரேட்லி) அவரிடமிருந்து மறைத்துவிட்டார்களாம்! இதே சமயம் ''கார்டியன்'' இதழ் கட்டுக்கடங்காத சிப்பாய்கள் என்ன செய்தார்கள் என்பதை வெளியிட்டது. பேருந்து நிலையம் சென்று 18-20 வயது மாணவர்களை வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுக் கொன்றனர். பின்னர் ஒரு கிராமத்தில் நுழைந்து கன்னாபின்னா என்று (அட்ரேண்டம்) சுட்டு வீழ்த்தினர். படைமனைக்குள் (பேரக்ஸ்) செல்லுமாறு அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. ஆனால், சாதாரண உடையில் ஜீப்பில் மீண்டும் வந்து வீடுகளில் நுழைந்து சுட்டுத் தள்ளிக்கொண்டே கொள்ளையடித்துச் சென்றனர். இப்படிப்பட்ட இரக்கமற்ற வன்கொடுமைகளுக்குப் பின்புதான் விடுதலைப் போராளிகள் சிங்களப் படையினரை வீழ்த்தினர். வேறு வழி?

www.tamilarangam.net

# இந்தியாவின் பங்களிப்பு என்ன?

கலவரத்தைத் தூண்டி, இனப் படுகொலையை நடத்தி, தமிழர்களின் தொழில் வாணிகம் முதலியனவற்றை அழித்து, கோடிக்கணக்கில் சொத்துகளைச் சூறையாடி, லட்சக்கணக்கானவர்களை ஏதிலிகளாக்கி, வீடு, வாசல் இன்றி வெளியேற்றி, ஜூலை 1983 இல் வெறியாட்டம் ஆடியதைக் கண்ட பின்பாவது, சிங்களப் பேரின ஆதிக்கத்தை, பேச்சுவார்த்தைமூலம் சமாதான வழியில் அல்லது வேறு முறையில் மாற்றுவதற்கு இந்தியாவால் முடிந்ததா? இல்லையே! அப்படிப்பட்ட ஒரு உதவியை அல்லற்படும் ஈழ மக்களுக்கு இந்தியா அளித்திருக்கவேண்டும். இந்நாட்டில் வாழும் ஆறு கோடித் தமிழர்களின் உணர்வுகளை மதித்தும், மனித நேய அடிப்படையிலும், மனித உரிமையைப் பேணும் கடமையாகவும் அதைச் செய்வதில் இந்தியாவிற்குப் பொறுப்பு உண்டு; அந்தப் பொறுப்பிலிருந்து அன்றும் - இன்றும் வழுவுகிறது; ஈழவர் நலனுக்கு மாறாக நடக்கிறது.

1971 இல் கிழக்குப் பாகிஸ்தானைப் பங்களாதேசம் என விடுவிக்க ஒரு போரையே நடத்தினார், இந்திரா அம்மையார்! ஆனால், அவதியுற்று வதைபடும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி ஒரு 'சிறு முன்னேற்றத்தைக்கூட இந்தியா காணமுடியவில்லையே! இசுலாமிய நாடான பாகிஸ்தானைத் துண்டாட இந்து மதவெறியர்கள் பச்சைக் கொடி காட்டினார்கள். மாறாக, மதச் சார்பின்மையைப் போற்றும் தமிழர்களின் நியாயமான உரிமைகளை மறுப்பதுதானே ''இந்துத்துவக்'' கோட்பாடு! அப்படியிருக்க அடிபடும் ஈழவர் விடுபட ''பாரதம்'' எவ்வாறு உதவும்?

## ஆரிய உறவு:

சைப்ரஸ் ஒரு தீவு - நாடு. துருக்கி, கிரீசு ஆகிய நாடுகளுக்கு அருகில் இருக்கிறது. அதில், பெரும்பான்மையாக உள்ள கிரேக்கர்கள் சிறுபான்மையான துருக்கியர்மீது மேலாண்மை செலுத்த முற்பட்டபோது, துருக்கி தனது படையை அனுப்பி, துருக்கியர் வாழும் நிலப்பகுதியில் அவர்கள் பாதுகாப்பாகவும், உரிமையோடும் வாழ வழி செய்தது. துருக்கியருக்கு இருக்கும் இன உணர்வுடன், சிங்களர் உரிமையைச் சிறிதும் பாதிக்காமல், இலங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைத் தமிழரின் துயரைத் துடைத்து அவர்களின் நியாயமான உரிமையைப் பாதுகாக்கத் தமிழகம் விரும்புகிறது. அதைச் செயல் படுத்த இயலாத வகையில், தங்களை ஆரிய வழியினர் என நம்பிக் கொள்ளும் இந்திய மேல் வருண ஆளும் கூட்டம் ஏமாற்றுகிறது. அதன் காரணமாகத்தானே தாம் செய்யும் சித்திரவதை, இனப் படுகொலை, அடக்குமுறை முதலியவற்றை இந்திய அரசு தட்டிக் கேட்காது எனும் உறுதியான நம்பிக்கையோடு சிங்கள மேலாதிக் கம் கொடுமைகளைத் தொடர்கிறது!

இந்தியாவின் வட புலத்தில் உள்ள வங்காளப் பகுதியிலிருந்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, குடியேறியதால் தம்மை ஆரிய வழியினர் எனக் கூறிச் சிங்களர் இன உயர்வு பாராட்டிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களுடைய தொன்மைக்கால, இடைக்கால வரலாற்றுக்கு மூலமாகக் கருதப்படும் புராணப் புளுகுகள் நிறைந்த ''மகாவம்ச''த்தின் கூற்றுப்படியே, அப்படிக் குடிவந்தவர்கள் பாண்டிய நாட்டுப் பெண்களையும், அத்தீவின் தொன்மை மக்களாகிய இயக்கர் குடிப் பெண்களையும் மணந்து இனப் பெருக்கம் செய்துகொண்டதாக இருக்கிறது. இயக்கர் தமிழரே என்பது பழந் தமிழ் நூல் குறிப்பிலிருந்தும், இப்பொழு தும் தென் மாவட்டங்களில் இசக்கியப்பன், இசக்கியம்மாள் எனும் பெயர்கள் வழங்கப்படுவதிலிருந்தும் அறியலாம். ய, ச எனத் திரிவது மொழியின் வழக்கு.

ஜெயவர்த்தனேயின் முன்னோர்கள், சோழ மண்டலக் கரையிலி ருந்து 300 ஆண்டுகளுக்கு முன்பு, இலங்கையில் குடியேறிய செட்டியார்கள்தாம்! மேலும், சந்திரிகாவின் தந்தை பண்டார நாயகாவின் முன்னோர்களும் 16 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியா வில் இருந்து இலங்கை சென்றவர்களே! ஜெயவர்த்தனேயின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றைப்பற்றி எழுதிய திரு. என். ராம் இந்தச் செய்திகளை 1989 மே 26 இல் ''இந்து'' நாளிதழில் தெரிவிக்கிறார்.

சிங்களரில் பெரும்பாலோர் தென்னிந்தியர்தாம் என உறுதிபடக் கூறி, ஆரிய இனவழிப் பெருமை பாராட்டலைச் சாணித்தனம் (Bull Shit) எனக் கிண்டல் செய்தவர், 1954-55 இல் இலங்கைப் பிரதமராக இருந்த, சர் ஜான் கொதலவால ஆவார்! நிலைமைகள் இவ்வாறு இருப்பினும், சிங்கள பவுத்த குருமார்களும், பெரும்பா லான அரசியல்வாதிகளும், பாமரர்களும் தம்முடைய ஆரிய இனத்தூய்மைபற்றிய நம்பிக்கையிலிருந்து விடுபட விரும்ப வில்லை. 1983 அக்டோபர் 7 இல், இனப் படுகொலைக்கு இரண்டு மாதங்களுக்குப் பின்பு, ஈழத் தமிழர் சிக்கலில் இந்தியா பரபரப் பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தபொழுது, திரு. லொகு பந்தரா எனும் நாட்டு மருத்துவத்துறை அமைச்சர் இலங்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து ஓர் எடுத்துக்காட்டு ஆகும். ''வட இந்திய மக்களுக்கும், சிங்களருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் அனைவரும் ஆரியர். இந்த இரு பகுதியில் உள்ள மக்களுக்கும் உள்ள ஒரே மாதிரியான உடற்கூறுகளால் இது தெளிவாகிறது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மூக்கும், இலங்கைக் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனே யின் மூக்கும் ஒத்திருக்கின்றன. எதிர்க்கட்சித் தலைவர் (அமிர்தலிங் கம்) அவர்களுக்கு அவ்வகையான மூக்கு இல்லை''. ஆக, வேதிய இந்து மதப்படியான நால்வருண ஏற்றத் தாழ்வுகளுக்கு மூலமான ஆரிய இன உயர்வு நம்பிக்கை சிங்களருக்கும் இருக்கிறது. ஆகையால், தமிழர்களின் தொல்லைகளுக்குத் தீர்வு காண்பதிலும், அவர்கள் சமனிய உரிமை பெறுவதிலும், இந்தியாவில் உள்ள மேல் வருணத்தாரும், இலங்கையில் உள்ள ஆதிக்க கூட்டமும் நாட்டம் செலுத்துவர் என எப்படி நம்ப முடியும்?

## ஆநீதிக்குத் துணையாகும் உணர்வற்ற அறிவு

மலையகப் பெருந்தோட்டத் தமிழரின் குடியுரிமையை நிலை நாட்டும் விஷயத்தில் இந்தியா அக்கறையுடனும், நியாயத்துடனும் நடந்து கொள்ளவில்லை. இன்றைக்கு அவர்கள் ஓரளவு உரிமை பெற்றுள்ளார்கள் எனில் அதற்குக் காரணம் என்ன? முதலாவதாக, அவர்களின் உழைப்பு இல்லையேல் தேயிலை உற்பத்தி நலிந்து, அந்நியச் செலாவணி ஈட்டுவதில் இலங்கைக்குப் பேரிழப்பு ஏற்படும். ஆகையால் அவர்களை இருக்கச் செய்வதில் அந்நாட்டிற் குத் தனி அக்கறை உண்டு. இரண்டாவதாக, அந்தத் தொழிலாளிகளி டையில் பெருமளவில் ஒற்றுமையை நிலைப்படுத்தி, இந்திய-இலங்கை அரசுகளின் நியாயமற்ற போக்குகளைச் சுட்டிக்காட்டி, மலையத் தமிழர் நலனில் ஈடுபாடு காட்டும் சிங்கள ஆட்சியாளரு டன் ஒத்துழைத்து, விடா முயற்சியுடன் துணிந்து செயல்படும் தொண்டமான் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும்.

இந்தக் காரணங்கள் இல்லையேல் மலையகத் தமிழர்கள், இந்திய அரசின் புறக்கணிப்பான போக்கால் மிகப் பெருந்தொல் லைக்கு உள்ளாகியிருப்பர். ஒரு காலத்தில் (1978-82), இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்து, இப்பொழுது அய்ரோப்பிய நடப்பு கள் பற்றி 'இந்து' இதழில் விமர்சனச் செய்திகள் தருகிறவர், தாமஸ் அப்ரகாம். மலையகப் பெருந்தோட்டத் தமிழரின் குடியுரி மைச் சிக்கலைக் குறித்து அதே நாளேட்டில் 1986 ஏப்ரல் 16 இல் எழுதினார். 1964 ஆம் ஆண்டில் லால்பகதூர் சாஸ்திரி-சிறிமாவோ ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது இந்தியாவின் சார்பில் பேச்சுவார்த் தைகளில் ஈடுபட்ட குழுவினரைப்பற்றி அதில் இவ்வாறு குறிப்பிடு கிறார்: ''இந்தியப் பேராளர் குழுவில் (டெலிகேசன்) இருந்தோருக் குத் தமிழ்நாடு ஒரு தொலைவான இடமாகத் தோன்றியிருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தி மொழியினரின் மய்ய நிலத்திலிருந்தும் அவர்களின் உடனடி யான அக்கறைகளில் இருந்தும் அது மிகத் தள்ளியிருந்தது. அடிபெயர்ந்தவர்கள் (ரிப்பேட்ரியேட்ஸ்) மிக அதிக எண்ணிக்கை யில் திரும்புவது குறித்துத் தமிழக முதலமைச்சர் (பக்தவச்சலம் அவர்கள்) முதலில் எதிர்ப்புத் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அதற்குப் பின்பு தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ளும் பொதுவான மனப்போக்கில் சேர்ந்துகொண்டதாகத் தெரிகிறது. கொள்கைகள் எவையும் கருத்தில் கொள்ளப்பட வில்லை. எத்தனை பேரைக் குடிபெயரச் செய்வது, எத்தனை பேரைத் தங்குவதற்கு அனுமதிப்பது எனும் நேரடியான எண் ணிக்கை விளையாட்டாக அஃது இருந்தது''

இந்த வரிகள் தமிழினத்தாருக்கு இந்திய அரசமைப்பில் உள்ள நிலையான ஒரு பெருங்கேட்டைச் சுட்டுகின்றன. இங்கு எரியும் நெருப்பின் சூடு டில்லியில் இருப்போரைச் சுடுவது இல்லை; ஆகையால் அதற்கான மறுசெயல் (ரெஸ்பான்ஸ்) அவர்களிடம் இருக்காது. செயலற்ற டில்லியின் மந்தப்போக்கு, சில நேரங்களில் சென்னையில் உள்ளவர்களையும் மரத்துப்போன உணர்வற்றவர்க ளாக்கி விடுகிறது! பலவகைகளில் மரம் மனிதருக்கு உதவுகிறது. இருப்பினும், தொடர்ந்து துயர்ப்படும் ஒருவன், அதற்கு முடிவேயி ருக்காது என எண்ணி, அதன் கிளையில் தூக்குப் போட்டுக் கொள்ள வரும்பொழுது, அதற்கும் மரம் கைக்கொடுக்கிறது. துயரைத் துடைத்துச் சாவை நிறுத்தும் கையாக மரக்கிளை அமைவதில்லை. அந்த உணர்ச்சி மரத்திற்கு இல்லை; அதனுடைய இயல்பு அப்படி! ஆனால், பிறர் துயர்துடைக்க முந்துவதுதானே மனிதப் பண்பு? அந்த உணர்வற்ற மனிதர்களை என்னவென்பது?

'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்'' - 997

என்பார் வள்ளுவர். தமிழினத்தின் இழப்புக்களை யாருக்கோ வந்தவை எனும் பாங்கில், இந்திய மேலாதிக்கம் ஒருங்கிணைந்த உணர்வின்றி நோக்குகிறது. அதனால் சிங்களர் ஊட்டம் பெறுகி றார்கள்; தமிழர்கள் வாட்டம் அடைகிறார்கள்.

கச்சத் தீவை இலங்கைக்கு 1970-களின் தொடக்கத்தில் இந்திய அரசு அநியாயமாகக் கொடுத்துவிட்ட செய்கை, தமிழகத்தின் நலனில் அதற்கு அக்கறையின்மையைத்தான் காட்டுகிறது. தமிழ ரின் நிலத்தில் ஒரு பகுதி பறிபோயினும், சிங்களரைத் திருப்திப் படுத்தவே அது முந்தி நிற்கிறது.

மழை போதாமல் பெரும்பாலும் வறண்டுள்ள தமிழகத்தின் தென் மாவட்டங்களின் தொழிற் பெருக்கத்திற்கும், வெளி வணிக வரிவாக்கத்திற்கும், பணி வாய்ப்புக்கும் இடமளிக்கும் சேது சமுத்திரத் திட்டத்தை மய்ய அரசு புறக்கணிக்கக் காரணம் கொழும்பு அரசு அதற்கு முகஞ்சுழிக்கும் என்பதே! இந் நாட்டிற்கு

www.tamilarangam.net

வரும் சுங்கவரி போனாலும் சரி, தமிழரை விடச் சிங்களரே அதிகக் கரிசனத்திற்கு உரியர் என இந்திய அரசை ஆட்டுவிக்கும் ஆதிக்கக் கூட்டம் கருதுகிறது.

## ஆடுங் குதிரை

இந்திய அரசை நடத்துகிறவர்கள், தமிழர் தலைவர் மானமிகு கி. வீரமணி அவர்கள் குறிப்பிடுவது போன்று, நம் இனம் அல்லர், ஆகையால் ஈழத் தமிழர் படுகொலையைத் தடுக்கும் மனம் படைத்தவர் அல்லவர். இனமும் மனமும் ஒன்றும்பொழுது சமுதாய உணர்வு உயிர்ப்புடன் இருக்கும். மனம், அறிவின் வளர்புலமும் உணர்வின் ஊற்றிடமும் ஆகும். உணர்வோடு ஒன்றாத அறிவும் திறனும் எவ்வளவு சிறப்பாக இருப்பினும் முன்னேற்றத்திற்கு அவை உதவாதவையே! பன்னாட்டு அரசியல் ஞானமும், நிருவாக ஆற்றலும், பட்டறிவும் பெற்ற இந்திய ஆட்சியாளர்களும், நிருவாகிகளும் இலங்கைத் தமிழர் சிக்கலில், முன்னேறி ஓடுங் குதிரையாக இல்லாமல், நின்ற இடத்திலே ஆடுங் குதிரையாக (ராகிங் ஹார்ஸ்) ஆகிவிட்டதற்குக் காரணம் அவர்களுடைய அறிவோடும், ஆற்றலோடும் உணர்வு ஒன்றாமையே!

இலங்கைத் தமிழினப் படுகொலை 1983-இல் நடந்தபொழுது பி.வி. நரசிம்மராவ், இந்தியாவின் வெளியுறவு அமைச்சராக இருந்தார். கொழும்பு சென்றார், பார்த்தார், வந்தார். அதற்குப் பின்பு அன்றிலிருந்து இன்றுவரை கொடுமையை எதிர்த்துப் பேச்சும் இல்லை, மூச்சும் இல்லை. அவர் பன்மொழிப் புலவராமே, பன்முனைத் திறலராமே? அவையெல்லாம் தமிழருக்கு எதிரான சிங்களர் முன் மண்டியிட்டுப் பணியக் காரணம் என்ன? இனமும் மனமும் ஒன்றவில்லை என்பதுதானே!

அடுத்து, கோபாலசாமி அய்யங்கார் மகன் காலஞ்சென்ற பார்த்த சாரதி போனார்; அகதி முகாம்கள் சென்று, அங்கிருந்தோருடன் தமிழில் பேசினார்; அவர்கள் அய்யா, அய்யா என அலறினர். மனமிளகிய அவர், ஜெயவர்த்தனே, மற்றும் தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணித் தலைவர்கள் ஆகியோருடன் கலந்து, இந்திய அரசின் சார்பில் ஒரு திட்டம் தயாரித்தார். தமிழர்களுக்கு ஒரு சிறிது பாதுகாப்பு அளிக்கக்கூடும் என நம்பப்பட்ட, மாவட்ட மன்றங்களுக்கு அதிகாரப் பரவல் செய்யும் ஏற்பாடு அதில் அடங்கும்; அத்துடன் 'இணைப்பு - சி' என ஒன்றும் சேர்க்கப்பட்டது. அதன்படி மண்டல அளவில் தன்னாட்சி அளிக்கப்படும். இந்த ஏற்பாடுகளுக்கு முதலில் ஆதரவு தெரிவிப்பது போல் காட்டிக்கொண்ட சிங்கள அரசு, காலப்போக்கில் அவற்றைக் கிடப்பில் போட்டது. ஏமாற்றம் தரும் இந்தப் போக்கைக் குறிப்பிட்டு, ''அமைதிக்கான ஒரு வேண்டுகோள்'' எனும் அறிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையில் திரு. சுப்பிரமணியமும் மற்றும் சில மூத்த குடிமக்களும், 1986 பிப்ரவரி 19 இல் கண்டனம் தெரிவித்தனர்; ஆனால், அதை எவருமே கண்டுகொள்ளவில்லை!

இதற்கு முந்திய கிழமை, அமெரிக்க மக்களரசுக் கட்சியின் மேலவை உறுப்பினர் (செனட்டர்) எட்வர்டு கென்னடி, ஜெயவர்த் தனேவுக்கு ஒரு மடல் எழுதினார்; இலங்கை இனப் பிரச்சினைக் குத் தீர்வுகாண கூட்டரசு முறையை ஏற்குமாறு கோரினார். ஆனால், அந்தக் கோரிக்கையும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் ஆயிற்று. ஏன் அப்படி நிகழ்ந்தது? இலங்கை இனப் பிரச்சினை இந்தியாவின் செல்வாக்கு வட்டத்திற்குள் (ஸ்பியர் ஆஃப் இன்புளு யன்ஸ்) அடங்கியது என்றும், அதில் பிற நாட்டவர் தலையிடக் கூடாது என்றும் ''ஓர் எழுதாத புரிதலை'' இந்தியா உருவாக்கியி ருந்தது. ஆக, தானும் உருப்படியாக உதவுவது இல்லை, மற்றவர்க ளையும் அவ்வாறு செய்யவிடுவதில்லையென்பது இந்தியாவின் நிலையாயிற்று. அதன் விளைவு என்ன?

## இந்தியாவின் தகுதி

ஆசிய, ஆஃபிரிக்க மக்கள் அய்ரோப்பிய நாடுகளின் பேராதிக்கத் தின் கீழ் இருந்த போது, அவர்களிடையே தேசிய உணர்வு, தேசப்பற்று, குடியாட்சியில் நாட்டம், சமனிய வேட்கை ஆகியன பரவின். ஆனால், அவற்றைப்பற்றி அனைவரும் நல்ல முறையில் முழுமையான தெளிவு பெற்றிருக்கவில்லை. பல சமூகங்களில் பார்வை அரைவேக்காட்டுத்தனமானதாக இருந்தது; இதனால், ஏதேனும் வகையில் முன் வாய்ப்பும், ஏற்றமும் வலிமையும் வாய்க்கப்பெற்ற இனங்கள் வலிமைக் குறைவானவற்றை அடக்கி யாள முற்பட்டன. அவ்வாறு வல்லாண்மை செலுத்துவதற்குத்தக்க் கோட்பாடுகளின் மெய்ப்பொருளைத் திரிபுபடுத்திக் கொண்டன. எடுத்துக்காட்டாக, தேர்தலில் பெரும்பான்மை பெற்ற கட்சி, குறிப்பிட்ட காலத்திற்கு ஆள்வதும், சிறுபான்மைக் கட்சியினர் அக்காலம் வரை அதை ஏற்பதும் ஒரு மக்களாட்சி முறை ஏற்பாடு. இந்த ஏற்பாட்டைத் திரித்து, எண்ணிக்கையிற் பெரும்பான்மை யான இனத்தின் மேலாதிக்கத்தைச் சிறுபான்மையர் அனைத்துக் காலத்திற்கும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்ற வகையில் மக்களாட்சிக்குப் பொருந்தாத, இனங்களிடையே பகையையும் முரண்பாட்டையும் நாசத்தையும் விளைவிக்கும் ஒரு நடைமுறை யைப் பல ஆசிய, ஆஃப்பிரிக்க நாடுகள் மேற்கொள்ளத் தொடங்கி யிருப்பது, மனித நேயத்தையும் உரிமையையும் நாகரிக வளர்ச்சி யையும் பொருளாதார முன்னேற்றத்தையும் குலைப்பதாக ஆகிவிட் டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவில் மய்ய அரசு மட்டத்தில், பெரும்பான்மை மொழி என்ற பெயரில் இந்திக்குத் தனி ஆதிக்கச் சலுகை அளித்திருப்பதும், இலங்கையில் பவுத்த சிங்களப் பெரும்பான்மையர் மேலாதிக்கத்தைச் சிறுபான்மைத் தமிழர் மீது திணிக்கும் வகையில் ஒற்றையாட்சியை நிறுவியிருப்பதும், குடியாட்சி முறையைச் செயல்படுத்துவதற்கான பெரும்பான்மை - சிறுபான்மை எனும் ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டது எனக் காட்டுவது எவ்வகையிலும் ஏற்புடையதன்று. ஒரே நாட்டில் வாழ ஒத்துக்கொண்டுள்ள வெவ்வேறு தேசியயினங்களுக்கிடையில் இருக்கவேண்டிய உறவுமுறையை அந்த ஏற்பாட்டின் அடிப்படையில் ஒழுங்குப்படுத்துவது ஒவ்வாது. வானொலிக்காக மட்டும் அமைந்த பெட்டி ஒருவகை. அத்துடன் ஒலிநாடாவும் சேர்ந்து, ஒன்றிலிரண்டு (டு-இன்-ஒன்) என ஆகும்பொழுது இணைப்புகளும் ஏந்துகளும் உடையதாக இருக்கும். அதுபோலவே, குடியாட்சி என்பதோடு செம்மையான கூட்டரசு முறை எனும் புதிய அரசியல் ஏற்பாட்டையும் ஏற்றுக் கொண்டால் மட்டுமே மாறுபட்ட தேசிய இனங்கள் இணக்கமாக வாழ முடியும்.

கண்ணை மூடிக்கொண்டு, பிடிவாதமாக, இத்தகு முறையை ஏற்க இலங்கை மறுக்கிறது. அதனால், அங்கு இனப்பகை தீரவில்லை, அமைதியில்லை. அடக்கப்படும் தமிழர் உரிமைக்குப் போராட வேண்டியிருக்கிறது. நியாயத்தைப் பெறுவதில் உறுதியாக இருக்கும் அவர்கள் 1956 முதல் 1983 வரை பல தடவைகள் பலவகையான இனத்தாக்குதலுக்கு ஆளாயினர். 1983 ஜூலையிலிருந்து அங்கு இனக்கொலையே நடக்கிறது. அந்த ஆண்டில் அது நிகழ்ந்ததை ஜெயவர்தனே கூட 1986 ஜனவரியில் வெளிப்படையாக ஒத்துக்கொண்டார். தமிழர் மீதான இனக்கொலை அங்கு தொடர்வதாக, நாடாளுமன்ற இரு அவைகளிலும், 1986 பிப். 26-இல் இந்திய வெளியுறவு அமைச்சர் பி.ஆர். பகத் குற்றம் சாட்டினார். இதற்கு விடையாக இலங்கையின் குடியரசுத் தலைவர் திரும்பத் திரும்பக் கூறியது, பஞ்சாபிலும் அசாமிலும் இந்திய அரசு அதே வகையில் நடந்து கொள்கிறது என்பதாகும்! சிறீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதாக, 1987 மார்ச் 13 இல் அய்.நா.வின் மனித உரிமை ஆணையம் ஒரு மனதாக நிறைவேற்றிய தீர்மானத்திற்கு இந்தியா ஆதவளித்த போதும் இதே போக்கில் பதில் வந்தது.

ஆக, மெய்யான கூட்டரசு அமைத்து, நியாயமான முறையில் தேசிய இன உறவுகளை ஒழுங்குபடுத்தாமல், அரசு வன்முறையை ஏவிக் குற்றம் செய்யும் இந்தியாவிற்கு, தனது நாட்டைத் திருத்துவதற்கான தகுதியில்லை என்பது சிங்கள வல்லாதிக்கத்தின் மறுமொழி! இலங்கையில் நடக்கும் இனப்படுகொலையைத் தடுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவோ, அது மீண்டும் நிகழாதிருப்பதற்கான உரிய சூழலை ஏற்படுத்தவோ, பாதிக்கப்பட்ட அத்தீவின் தமிழர் தமது நியாயத்தைப் பெறவோ தேவையான அழுத்தத்தைத் தர இந்தியா தவறுவதற்கு இது முகாமையான முட்டுக்கட்டையாகும்.

## இனக் கொலை நிற்கவில்லை

இந்நிலையில், இலங்கை இனக்கொலை முடிவுக்கு வரத் தேவையானதைச் செய்ய வேண்டிய தனிக்கடமை இந்தியாவிற்கு இருந்தும், அதனால் எதுவும் உருப்படியாகச் செய்ய முடியவில்லை. இஃது இப்படியிருக்க, பெருநிலத்தையும், பெருந்தொகையான மக்களையும் ஆளும் வலிமையான இந்திய மய்ய அரசு, தமிழருக்குச் சார்பானது (!) என்றும், ஆகையால், அது சிங்களர் நலத்தைக் கெடுக்கும் போக்கினது என்றும், சுய நல அரசியல்வாதிகளும் புத்தரின் பெயரில் மூட மத நம்பிக்கையை வளர்க்கும் பார்வை குறுகிய குருமார்களும், இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்துப் பாமரரை நம்பச் செய்து, அவர்களுக்கு அச்சம் கலந்த வெறியை ஊட்டியுள்ளனர். இந்தப் பின்புலத்தில் உருவாகும் சிங்களக் காடயரும், காவலரும், படையினரும் அவ்வப்பொழுது வன்முறையைக் கையாண்டு வகைதொகையற்ற முறையில் ஈழத் தமிழரைக் கொல்வது குறைந்தபாடில்லை. 1983 ஆம் ஆண்டிற்குப் பின்பு, போராளிகளை ஒடுக்குவது எனும் பெயரில், தமிழரில் பொதுமக்களை முடித்துக்காட்டுவது தொடர் நிகழ்வென்பது மிகவும் துயர்தரும் மெய்யம்மையாகும். 1985 ஏப்ரல் முதல் 1986 பிப்ரவரி வரை பத்து மாதங்களில் 2,587 பொதுமக்களை இலங்கை ராணுவம் கொன்றதென, லண்டனிலிருந்து வெளிவரும் 'கார்டியன்' எழுதிற்று. 1986-இல் மட்டும் 2000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதை, அய்.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் 43-வது கூட்டத் தொடரில் இந்தியக் குழுத் தலைவர் வீரேந்திரபடீல் எடுத்துரைத்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில், பிரேமதாசா பொறுப்பில் இருந்தகாலம் உள்பட, இதே அவலம் நிகழ்ந்தது. மக்கள் நேசன் (பீபுள்'ஸ் அலயன்ஸ்) என்ற பெயரில் கூட்டணி ஆட்சி அமைத்துள்ள திருமதி. சந்திரிகா தலைமையிலும், 1995ல் தமிழர் மீது ராணுவ வன்முறைகள் தொடர்வதைக் குறிப்பிட்டு, மனித உரிமைக் கவனிப்பு (வாச்) எனும் முகாமையான ஓர் அமெரிக்க அமைப்பு 1995 டிச. 8 இல் அறிக்கை வெளியிட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் காணமற் போவதும், கொல்லப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும், குடியிருப்புப் பகுதிகள் குண்டுமாரிக்கு இலக்காவதும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திம்புவில் வீம்பு

1983 ஆம் ஆண்டு நடந்த பெருங்கொடுமையான அடுத்து, லட்சக்கணக்கில் அகதிகள் தமிழகத்திற்கு வந்த நிலையில், இங்குள்ள தமிழர்கள் ஒன்று திரண்டு குரல் எழுப்பியதைக் கண்டு, இந்திய நடுவன் அரசு இலங்கைத் தமிழர் சிக்கலைத் தீர்த்து வைக்கச் சில முயற்சிகளைச் செய்தது. இந்திரா அம்மையார், ராசீவ் காந்தி ஆகிய இருவர் காலத்திலும், இவ்வகையில் பரபரப்புத்தான் காணப்பட்டதேயன்றி, தெளிவான, துணிந்த, உறுதியான, நியாயமான பயனும் முன்னேற்றமும் தரத்தக்க எதுவும் நடக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க மெய்ம்மையாகும். தமிழக மக்களின் உணர்ச்சிகளை அடங்கச் செய்யும் காலக் கழிப்பிற்கானவையாகத் தான் பேச்சுவார்த்தைகளும், அறிக்கைகளும், விளக்கங்களும், ஆலோசனைகளும் இருந்தன. கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்த மக்கள் காலப்போக்கில் அதை மறுத்தவர் அல்லவா? அந்த வகையில் காலம் போயிற்று; சிக்கல் தீரவில்லை; கொடுமைகள் மிகுந்து. வருகின்றன; மறதிக்குள்ளான மக்கள் மீண்டும் எழுச்சி பெறக்கூடாது என்பதற்காக, பிரச்சனையின் அடிப்படைகள் மறைக்கப்படுகின்றன.

இருப்பினும் சில முயற்சிகளை நினைவுகூர்வது, சிக்கலின் தன்மையையும், நிகழ்கால, எதிர்கால நடப்புகளையும் புரிந்து கொள்ள உதவும். 1983 ஆம் ஆண்டு இனப் படுகொலையை அடுத்து, ஜி. பார்த்தசாரதியின் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, மண்டல அளவில் தன்னாட்சித் திட்டத்தை ஜெயவர்தனே அறவித்தார் என பார்த்தோம். 1957 ஆம் ஆண்டு பண்டா-செல்வா உடன்பாட்டில் ஒத்துக்கொள்ளப்பட்ட அளவுகூட, தமிழ் மாநிலத்திற்கு அந்தத் திட்டத்தின்கீழ் அதிகார ஒப்படைப்பு இல்லை; இருப்பினும், அந்தச் சிறிதளவு பயன்தருவதாகக் கருதப்பட்ட திட்டத்தையேனும் கொண்டு செலுத்த வேண்டுமென்ற நேர்மை ஜெயவர்த்னேவுக்கு இருந்ததா? டில்லியில் அதை ஒப்பினார்; கொழும்பு சென்ற பின்பு மறுத்தார்! ஏன்? அவருடைய அமைச்சர்களே அதை எதிர்த்தனர்! இவ்வாறு ஒப்புவதும், பின்வாங்குவதும் தமிழர்களை நம்பிக்கையிழக்கச் செய்கிறது என இந்திராகாந்தி கூறியதாக, சிறீமாவோ திம்பு பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்டப்பேச்சு வார்த்தை தொடங்கு முன் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூடான் நாட்டின் தலைநகர் திம்பு. அதில் 1985 ஜூலை முற்பகுதியிலும், ஆகஸ்டு பிற்பகுதியிலும் இரண்டு கட்டங்களாகப் பேச்சு வார்த்தை நடத்தித் தீர்வு காண ராஜீவ் காந்தி காலத்தில் முயற்சி நடந்தது. விடுதலைப் புலிகள், டெலோ, ஈ.பி. ஆர்.எல்.எஃப், ஈரோஸ் ஆகிய நான்கு போராளி அமைப்புகளும் ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்ற பெயரில் ஒன்றாகவும், பிளாட், தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி ஆகியவை தனித் தனியாகவும் கருத்தறிவித்தன. அனைவரும் ஒருமித்தவாறு நான்கு அடிப்படைக் கோரிக்கைகளை வலியுறுத்தினர் ''இலங்கைத் தமிழர்களைத் தனி தேசியம் என ஏற்க வேண்டும், (2) தமிழ் ஈழத் தாயக நிலம் நிலைத்து, சிதறாதிருக்க வேண்டும், (3) தமிழ்த் தேசியத்திற்குத் தானே தீர்மானிக்கும் (சுய நிர்ணய) உரிமை வேண்டும், (4) மலையகப் பெருந்தோட்டத் தமிழருக்கு முழுமையான குடியுரிமை அளிக்க வேண்டும்.

இலங்கை அரசின் சார்பில் குடியரசுத் தலைவரின் தம்பி, எச்.டபிள்யு. ஜெயவர்த்தனே தலைமையில் கலந்து கொண்டனர். 1984 முழுவதும் கொழும்புவில் நடந்த சர்வகட்சி மாநாட்டில் இலங்கை அரசு முன்வைத்த திட்டத்தின் அடிப்படையில், அந்நாட்டின் குழு திம்புவில் யோசனைகளை முன் வைத்து எனத் தெரிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தில், உரிய அதிகாரங் கொண்ட தமிழ் மாநில அமைப்பு இல்லையென்பதும், அரை குறையான அதிகார ஒப்படைப்புத் திட்டத்தையும் புத்த மத குருக்களின் மகா சங்கமும், எதிர்க்கட்சியாக இருந்த சுதந்திரக் கட்சியும் எதிர்த்தன என்பதும், அதனால் 1984 டிச.24இல் அந்த சர்வகட்சி மாநாடு திடீரெனக் கலைக்கப்பட்டது என்பதும் கவனத்திற்குரியன. அப்படியான கதிக்கு உள்ளான கவைக்குதவாத ஒரு யோசனையை இலங்கைக் குழு மீண்டும் முன் வைத்தது, அதன் மாறாத வீம்பு (பிடிவாதம்) எத்தகையது என்பதைப் பறை சாற்றுகிறது.

இத்தகு அணுகு முறையால் திம்பு பேச்சு வார்த்தை முறிந்ததில் வியப்பில்லை. இந்நேரத்தில், வேதனை தரும் ஒரு காரியத்தை இந்திய அரசு அவசர கோலத்தில் செய்தது. பேச்சுவார்த்தை தடைப்படக் காரணமாயினர் எனக் கூறி, பாலசிங்கம், சந்திரகாசன், சத்தியேந்திரன் ஆகிய ஈழவரின் பேராளர்களை நாடு கடத்திற்று! தி.க., தி.மு.க., தமிழ் நாடு காமராசர் காங்கிரசு (இப்பொழுது, தமிழர் தேசிய இயக்கம்) ஆகியவற்றின் தலைவர்களும், அவர்களுடன் சேர்ந்த தமிழ் ஈழ ஆதரவு அமைப்பின் (டெசோ) பிறரும் கிளர்ச்சி செய்த பின்பு அந்த ஆணையை டில்லி திரும்பப் பெற்றது. ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்வதைவிட, சிங்களரைத் திருப்திப்படுத்துவதே தனக்கு முக்கியம் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இந்தியா காட்டிக் கொண்டது. 1986 நவம்பரில்

www.tamilarangam.net

பெங்களூர் சார்க் மாநாட்டின்போது, தம்பி பிரபாகரன் உள்ளிட்ட போராளித் தலைவர்களைக் கைது செய்ய மாநில அரசுக்கு மய்ய அரசு ஆணையிட்டதும், அவ்வமையம் அவர்கள் கேவலமாக நடத்தப்பட்டதும் இதே வகைப்பட்டதாகும்.

## ஈழத் தாயகம்:

திம்பு பேச்சு வார்த்தையின் இரண்டாம் கட்டம் தொடங்கும் தருணத்தில், சிறிமாவோ அவர்களின் கருத்தை அருண் சாகோ எனும் இதழாளர் கேட்டறிந்தார். தமிழ், அலுவலக மொழியாக ஏற்கப்படுவதையோ, வடக்கு கிழக்கு மாநிலங்கள் இணைந்த தமிழர் தாயகம் அமைவதையோ, அவர்களைத் தனித்த தேசிய இனம் என ஏற்பதையோ தாம் ஏற்பதற்கில்லை என்றார். சீக்கியர்களைத் தனித்த தேசிய இனம் என இந்தியா ஏற்குமா? என வாதிட்டார் (இந்து 12.8.1985).

தனித் தாயகம், சொந்த நிலம், என்பது இலங்கையில் குறைந்தது மூவாயிரம் ஆண்டுக்கால நாகரிக வரலாற்றை உடைய ஈழத் தமிழர்களுக்கு ஓர் அடிப்படை உரிமை. ஒரு காலத்தில் இலங்கை முழுதும் ஈழமாக இருந்தது; சிங்களர் குடியேறிய பின்பு, காலப் போக்கில், வடக்கு கிழக்குப் பகுதிகளுடன் அவர்களுடைய மண்ணின் பரப்பு சுருங்கி விட்டது. அதுவேனும் பறிபோகாமல் இருக்க உரிய அரசியல் அமைப்பு வேண்டும் என்பது அவர்களின் மிக நியாயமான கோரிக்கை. அதை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டியது ஓர் அவசரத் தேவையாகும். ஏன் எனில், அரசாங்க உதவியுடன் நடைபெறும் சிங்களர் குடியேற்றங்களால் அது பறிபோய்க் கொண்டிருக்கிறது.

அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவியாக இருந்து, இன்று தமது மகளின் தலைமையில் ஆளுங் கூட்டாணியில் அங்கமாகிப் பிரதமராக இருக்கும் சிறிமாவோவின் கருத்தாக மட்டுமல்லாமல், தமிழருக்குத் தாயக உரிமையை மறுப்பது என்பது சிங்களத் தலைவர்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்றாக இருக்கிறது. 1986 ஜன 28இல் 'இந்து'வில் வெளியான பேட்டியில், தாயக எண்ணத்தைத் தமிழர்கள் கைவிட வேண்டுமென்றும், தீவு முழுவதிலும் அவர்கள் வாழலாம் என்றும் ஜெயவர்த்தனே கூறினார்.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு மேலாக எதையும் அமைக்கக் கூடாது என புத்த மகா சங்கம் முடிவு செய்திருப்பதாகவும், அது போலவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மண்டல மன்றங்களோ, மாநிலங்களோ அமைவதை எதிர்ப்பதாகவும் 1984 மார்ச் இரண்டாம் கிழமையில், செல்வாக்கு மிக்க மதகுரு பலிபனெ சந்தானந்த மகா நாயகெ அறிவித்தார்.

மாநில மன்றங்களை உண்டாக்கி, இனச் சிக்கலைத் தீர்க்கப் போவதாக குடியரசுத் தலைவராக இருந்த ஜெயவர்த்தனே அறிவித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவுடன், அதை எதிர்த்து 20 அமைப்புகள் இணைந்த ஒரு கூட்டணி 1986ஆக 12 இல் உருவாயிற்று. புத்த குருக்கள், செல்வாக்கான தொழில் அதிபர்கள், முன்னணி வழக்கறிஞர்கள், ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகள் முதலியோர் அதில் உறுப்பினர். சிறிமாவோ அந்த முன்னணிக்குத் தலைவர்.

குடியரசுத் தலைவர் சந்திரிகா 1995இல் மண்டல மன்றங்கள் திட்டத்தை அறிவித்துள்ளார். அதை புத்த மகா சங்கமும், எதிர்க்கட்சியான அய்க்கிய தேசியக் கட்சியும் ஏற்கவில்லை என்ற மெய்ம்மையைக் கணக்கில் எடுக்காமல் விட முடியுமா? ஆளுங்கூட்டணிக்குள்ளாகவே, சிறிமாவோவின் முழு ஒப்புதல் கிடைக்கும் என்பதை நம்ப முடியுமா?

தமிழருக்கு நியாயம் வழங்குவதாக, மூளியான திட்டம் ஒன்றை ஆளுங்கட்சி கொண்டு வருவதும், அதற்கு அக்கட்சிக்குள் ஒரு பிரிவினரும், எதிர்க்கட்சியினர் அனைவரும் எதிர்ப்புத் தெரிவிப்பதும், அதனால் அறிவிக்கப்படும் திட்டம் கைவிடப்படுவதும் 1957இல் இருந்து தொடரும் நடப்பு ஆகும். இதைப் புரிந்து கொண்டால்தான், சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன்பாகப் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனும் நிபந்தனை மோசடியானது எனப் புரியும். அறிவித்த திட்டத்தை வழக்கம்போல் கைவிட்டால், அல்லது ஒப்பந்தத்தைக் கிடப்பில் போட்டால் கேட்பது யார்? எத்தனை முறைதான் நம்பிக்கை மோசடிக்கு ஆளாகி ஆதரவற்றவர்களாய்ப் பெருங்கொடுமையில் சிக்கிமாள்வது?

இன்னொன்று, தீவு முழுதும் வாழலாம் என இனிக்கப் பேசும் ஜெயவர்த்தனேயின் கருத்து, விவரமின்றி மேற்போக்காகச் சிந்திப்போருக்குப் பரந்த நினைப்பாகத் தோன்றலாம். தீவு முழுவதையும் திறந்துவிடும் தாராள உள்ளங் கொண்ட (!) சிங்களர், தமக்குரிய மூன்றில் ஒரு பங்கு மண்ணைப் பாதுகாத்துக் கொள்ள முயலும் தமிழர்மீது குண்டுமாரி பொழிவது ஏன்? இலங்கை முழுதும் அனைவருக்கும் சொந்தம் எனக்கூறி, பாரம்பரியமாக ஓர் இனத்திற்குரிய நிலப்பரப்பைப் பறிப்பது மோசடியல்லவா? வரலாறு தெரிவிக்கும் செய்தி என்ன? மொழி உரிமை வேண்டிப் போராடியதற்காக 1958இல் இனத்தாக்குதல் நடத்தபோது பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் நிலத்தில் வந்துதானே புகலிடம் பெற்றனர்? அதற்குப் பின்பு 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளிலும் அவ்வாறுதானே நிகழ்ந்தது? பேரின ஆதிக்க ஆசையை விடாத பெரும்பான்மைச் சிங்களருக்கு மத்தியில், தீவு முழுதும் சிறுபான்மையராக அஞ்சி ஒடுங்கி வாழ்வது உரிமையும், பாதுகாப்பும் உடைய வாழ்வு ஆகுமா? குருவிக்குக்கூடும், குடும்பத்திற்கு வீடும் இருக்கும் பொழுது இனத்திற்கு நாடு வேண்டாமா? அங்கு தனியாட்சியில்லாவிடினு, தன்னாட்சியாவது வேண்டுமல்லவா?

www.tamilarangam.net

உரிமையுடைய, பாதுகாப்பான தனித்த மாநிலம் ஒன்றில்லாமல், பெரும்பான்மைச் சிங்களரிடையே வாழும் வரை, அவர்களின் அச்சுறுத்தலுக்கு ஆட்பட்ட கூலிகளாகவே தமிழர் வாழ நேரிடும் என்பதைக் காட்ட எண்ணற்ற நிகழ்ச்சிகள் உண்டு. அண்மையில், 1995 டிசம்பர் முதல் நாளில் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' தரும் செய்தி அதையே உறுதிப்படுத்துகிறது. மலையகப் பெருந் தோட்டத் தொழிலாளிகள், ஈழத்தமிழருடன் தங்களை இணைத்துக் கொள் வதோ, போராளிகளுக்கு ஆதரவு தருவதோ இல்லை. இருப்பினும், அவர்களை வரைமுறையின்றிக் கைது செய்கிறார்கள், விசாரிக்கி றார்கள், தொல்லை தருகிறார்கள். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மோதல் நேரும் போதெல்லாம், தோட்டத் தொழிலாளர்களைத் தமிழர் எனக் கூறி அடிக்கிறார்கள்; இஃது ஒரு வாடிக்கை யாகிவிட்டது. நான்கு தமிழர்கள் ஒன்று சேர்ந்து சென்றால் காவலர்கள் அய்யப்படுகிறார்கள். பல இளைஞர்களுக்கு அடை யாள அட்டை கொடுக்கவில்லை; அதனால், தேவையான பொருள் கள் வாங்க - நகரங்களுக்குச் செல்லவே அவர்கள் அஞ்ச வேண்டியிருக்கிறது.

ஆக, இலங்கை முழுதும் தமிழர் வாழலாம் எனக் கூறித் தனிமாநிலம் மறுப்பது, சிங்களர் நிலையாக அவர்களை ஒடுக்குவ தற்கே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இழப்பை ஈந்த ஒப்பந்தம்:

பெருமளவு இனப் படுகொலை நடந்த நான்காண்டுகளுக்குப் பின்பு, 1987 ஜூலை 29இல், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்றில் ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனெயும் கையெழுத்திட்டனர். இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளை இணைத்துப் போதிய அதிகாரங்களைக் கொண்ட மாநில மன்றத்தை அமைப்பதென்றும், அதற்கு முன் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டுமென்றும், இந்திய அமைதிப்படை இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் ஒப்பந்த நிறைவேற்றத்திற்காகச் செயல்படுமென்றும் அதில் கண்டிருந்தது.

ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட முறை, அதன் உள்ளடக்கம், அது நிறைவேற்றப்பட்ட வகை என எப்படிப் பார்த்தாலும் முறைகேடாகவும், இலங்கைத் தமிழருக்கு இழப்பு நேரும் வகையிலும் இந்தியா நடந்து கொண்டது.

பாலஸ்தீனம், இசுரேல் ஆகியவற்றிடையே உள்ள சிக்கலைத் தீர்க்க அந்த இரு கட்சியினரும் பேசுகிறார்கள்; அம்மக்களின் தலைவர்கள் கையெழுத்திடுகின்றனர்; அவர்களுக்கிடையில் பேச்சு நடக்கத் துணை நின்று, தீர்வு ஏற்பட அமெரிக்கா வகை செய்கிறது. ஆனால், இங்கு ஈழத் தமிழர்கள், ஒப்பந்தத்தின் ஒரு கட்சியினர் ஆகவில்லை; கையெழுத்திடவில்லை; அஃது அவர்களின் மீது திணிக்கப்பட்டது.

தமிழ். மொழிக்குக் கிடைக்கவேண்டிய சமநிலை, மாநில எல்லைகள், அதற்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கான கால வரையறை முதலியன குறித்துத் தெளிவில்லாமை காணப்பட்டது.

பல ஆண்டுகளாகப் பல கட்டங்களில் பெற்ற பட்டறிவின் காரணமாக, தமிழர் தலைவர்கள் இந்த ஒப்பந்தத்தினால் நன்மை அடைவதோ, சமாதானத்தைக் காண்பதோ இயலாதென எண்ணினர். இதை நன்கறிந்த புலிப்படைத் தலைவர் தம்பி. பிரபாகரன், யாழ்ப்பாணத்தில் தமது மக்களுக்கு 1987 ஆக.4 இல் ஆற்றிய உரையில், இந்தியப் பிரமரின் உறுதிமொழிகளில் நம்பிக்கை வைப்பதாகவும், இந்திய நாட்டையும் மக்களையும் நேசிப்பதாகவும், இந்தியப் படைக்கு எதிராகத் தாம் போரிடுவது என்ற பிரச்சினையே எழவில்லை யென்றும், பகைவரிடமிருந்து தமது மக்களைக் காக்கும் பொறுப்பை இந்தியப்படை ஏற்கிறதென்றும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தாலும் அந்த ஒப்பந்தத்தின் விளைவாகத் தமிழர் பிரச்சனைக்கு நிலையான தீர்வு ஏற்படாதென எண்ணுவதாகவும், சிங்கள இனவாதத்தின் காரணமாக ஒப்பந்தம் சிதைக்கப்படும் காலம் தொலைவில் இல்லை என்றும் கருத்தறிவித்தார்.

இவ்வளவு தூரம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்திய பிரபாகரன் இந்தியப் படையுடன் .மோத வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார்.

தமிழர்களுக்கு மாநிலம் ஒன்றை அமைத்து, அதிகார ஒப்படைப்பிற்கு (டெவல்யூசன்) ஏதேனும் ஓர் ஆட்சி முயன்றால் அதைக் குலைப்பதற்கு வன்முறையில் ஈடுபடுவது சிங்களர் வாடிக்கை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு முன்பு, நட்வர்சிங் மற்றும் ப. சிதம்பரம் ஆகியோர் இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக, 1986 டிசம்பர் 19-இல் முற்படுயோசனைகள் (புரபோசல்ஸ்) உருவாயின. அவற்றின் அடிப்படையில் அதிகார ஒப்படைப்புக்கான அலகு (யூனிட்) நிர்ணயிக்கப்படும் என முடிவாயிற்று. தொடர்ந்து இந்திய அரசு அடுத்த கட்ட நடவடிக்கையில் இரங்கிற்று. இந்நிலையில் 1987 பிப். 16-இல் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களை, மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் சிங்களப்படை கொன்று குவித்தது. இதையடுத்து மூன்று நாட்களுக்குப் பின்பு, நாடாளுமன்றத்தில் பேசிய அதிபர் ஜெயவர்தனே, பொதுமக்களைச் சிங்களப்படை தாக்கியதேயில்லையென்றார்! இந்த மொக்கையான மறுப்பு உலகத்தை வியப்பில் ஆழ்த்திற்று.

ஒப்பந்தத்தில் ஈடுபட்ட இந்திய அரசு, வழக்கமான இவ்வகைப்பட்ட சிங்களரின் முறைகேடான நடப்புக்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

இந்தியப் படை தமிழ் ஈழத்திற்குச் சென்று கொண்டிருந்த தருணத்தில் அங்கு எப்பொழுதும் போல் சிங்கள அரசின் வன்முறைப் போக்கின் ஆபத்து தணிந்தபாடில்லை. இருப்பினும் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கினர். வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்தியப் படை அங்கு இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் செயல்படவேண்டும் என்ற நிபந்தனையிருந்ததால், சிங்கள வெறியைத் தணிக்க அவர்களால் ஏதும் செய்ய வாய்ப்பில்லை.

இந்நிலைகளைச் சீர்படுத்த உறுதிமொழிகளைத் தர இந்திய அரசைப் புலிகள் வேண்டினர். அது தயக்கம் காட்டியதால் 1987 செப். 15 இல் திலீபன் பட்டினிப் போராட்டம் மேற்கொண்டு பன்னிரண்டாம் நாள் மறைந்தார்.

இவ்வேளையில் இன்னொரு தகாத செயல் தொடங்கிற்று. மூன்று நட்சத்திரக் குழு, ஈழத் தேசிய சனநாயக விடுதலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னணி ஆகிய அமைப்பினா வல்மையான நவீன கருவிகளைக் கொண்டு புலிகளையும் அப்பாவி மக்களையும் சுட்டுத் தள்ளினர். புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து இந்தியாவுடன் ஒத்துழைத்துக் கொண்டிருந்தபோது 'ரா' எனும் இந்திய உளவுத் துறை, அவர்களுக்குப் பயிற்சியளித்து, கருவிகள் கொடுத்து உதவியது.

'ரா' - என்பதின் முறைகேடான தலையீட்டால் ஈழச் சிக்கல் மோசமடைந்து, தமிழர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயினர். பல போராளிக் குழுக்களுக்கிடையில் செயல்பட்டு, நம்பகமற்ற விதத்தில் அது நடந்து கொண்டதாகவும், புலிகளுக்கும், டெலோவுக்கும் இடையில் நடந்த மோதலில் அதற்கு மோசமான பங்கு இருந்தது என்றும் இந்திய முன்னாள் அயல்துறைச் செயலாளர் எ.பி. வெங்கடேசுவரன் 1988 செப். 2 இல் ''இந்து''வில் எழுதியதுடன், இந்திய - இலங்கை ஒப்பந்தம் தோல்வியடைந்ததன் காரணங்களில் அந்த அமைப்பின் தலையீடும் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.

இஃது ஒருபுறமிருக்க, 1987 அக்டோபர் முதல் வாரத்தில், 17 புலிப் போராளிகளை இலங்கை கடற்படை கைது செய்தது. அவர்கள் இலங்கை அரசின் பிடியிலிருந்து விடுபட்டு, ஒப்பந்தம் சரியாக நிறைவேறும் வரை இந்தியாவின் பொறுப்பில் இருக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. ஆயுதங்களை ஒப்படைத்துக் கொண்டிருந்த போராளிகளுக்கு அப்படியொரு ஏற்பாட்டைச் செய்வது நியாயம் தானே! ஆனால், இந்தியாவினால் அவ்வாறு செய்ய இயலவில்லை. இந்நிலையில், சிங்களரிடம் சித்திரவதைப் படுவதை விட நஞ்சுண்டு மாள்வதே உகந்தது எனப் போராளிகள் முடிவு செய்தனர்; குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 பேர் இறந்தனர். உரிமைக்குப் போராடியவர்களைக் காக்க முன்வராமல், பேரின ஆதிக்கத்துக்குத் துணைபோகும் இந்தியப் படையின் நடப்பைக் கண்ட பின்பு, மேற்கொண்டு ஒப்பந்த நிறைவேற்றத்திற்கு ஒத்துழைக்கப் புலிகள் மறுத்தனர். அதையடுத்து, தம்பி. பிரபாகரனைப் பிடிக்க உதவுவோருக்குப் பத்து லட்சம் தருவதாக அக்டோபர் இரண்டாம் வாரத்தில் ஜெயவர்தனே அறிவித்தார்!

www.tamilarangam.net

# எம்.ஜி.ஆர்.

ஈழத் தமிழர்களின் நலன்களை இந்திய மய்ய அரசு புறக்கணித்து விட்டதென்ற தி.க., தி.மு.க., தமிழ்நாடு காமராசர் காங்கிரசு ஆகியவற்றின் குற்றச்சாட்டை, அகில இந்திய அ.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் அக். 12 இல் வழிமொழிந்தார் என்பதையும், அவ்வமையம் அக்கட்சியின் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரனார் தமிழக முதல்வராக இருந்தார் என்பதையும் இங்கு நினைவு கூர்தல் வேண்டும்.

இலங்கைத் தமிழர்களைக் கொன்று கொண்டே வட்டமேசைப் பேச்சுகளில் இலங்கை அரசு ஈடுபடுவதை இரட்டைவேடம் என 1984 ஏப். 14 இல் எம்.ஜி.ஆர். ஏற்கெனவே கண்டித்திருந்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்த நிறைவேற்றத்தில் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் மய்ய அரசுக்கும் வேறுபட்ட பார்வையிருந்தது. தனது ஆசிரிய உரையில், 1987 நவ. 11 அன்று ''இந்து'' இதழ் இவ்வாறு எழுதிற்று: '' தமது அரசின் வைக்கும் , எம்.ஜி.ஆர். அவர்களின் நிலைக்கும் வேறுபாடில்லையென ராஜீவ் காந்தி வலியுறுத்துகிறார்; இது சரியான கூற்றல்ல என்பது தெளிவு. (இந்தியப் படையின்) தாக்குதல் தொடங்கிய நாளில் இருந்து இன்றுவரை, போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென வெளிப்படையாகவே அகில இந்திய அ.தி.மு.க. தலைவர் கோரிக்கை விடுத்துவருகிறார்.. போராளி அமைப்பின் தலைவர்கள் கூடிப்பேசி, இந்திய அரசின் நோக்கிற்கு உகந்ததாக இருக்க முடிந்த ஓர் அரசியல் முடிவை எடுப்பதற்கு 48 மணிநேரப் போர் ஓய்வு தேவை யென, வே. பிரபாகரன் தமிழக முதல்வர் மூலம் வேண்டியிருக்கிறார். அது குறித்து இந்திய அரசு நாடாளு மன்றத்திற்குத் தெரிவிக்காதது கவலை அளிக்கிறது''.

அதே ஆண்டு அடுத்த மாதம், எம்.ஜி.ஆர். அவர்கள் இறப்பதற்கு முந்திய நாளான 23 ஆம் தேதி, தாமஸ் அப்ரகாம், ஜெயவர்தனெ - வைக் கேட்ட கேள்வியிது: இதற்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் புதிய ஒரு மட்டத்தில் புரிதல் இருப்பதாகக் கருதுகிறீர்களா?

பதில்: மய்ய அரசுடன் நிச்சயமாக இருக்கிறது.. ஆனால், தென்னிந்தியாவிலிருந்து ''பயங்கரவாதிகளுக்கு'' எவ்வித உதவியும் வரக்கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதிலிருந்து நாம் அறிவதென்ன? தமிழக அரசு போராளிகளுக்கு உதவியது; மய்ய அரசு அவர்களின் பகைவர்களாகி சிங்களருடன் இணக்கமாக இருந்தது. அதன் விளைவு என்? இந்தியாவிற்குப் பகையல்லாத, இரக்கமற்ற கொடிய அடக்கு முறையில் இருந்து தமது இனத்தையும் மண்ணையும் மீட்க உயிரையும் மதியாது கடுமையாகப் போராடுகிற, விடுதலைப் புலிகளோடு இந்தியப் படை மோதியது. அதற்கு வெற்றி கிட்டவில்லை. எனினும், போராளிகளுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. இருதரப்பிலும் ஆயிரக்கணக்கில் மாண்டனர். அத்துமீறல்கள் எனச் சுட்டப்படும் நடப்புகளில் இறங்கி, ஈழத் தமிழ்ப் பொதுமக்களுக்கு ஆறாத்துயர் தரும் விளைவுகளை ஏற்படுத்தியது. இந்தியப் படைத் தலைவர்களும், மேல் நாட்டினரும் இதை வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வளவு கேட்டிற்குப் பின்னும் தமிழர்களுக்குச் சிறிதேனும் நன்மை கிட்டிற்றா? உரிய அதிகாரம் பெற்றனரா? சிறப்பு நிருபர் கடியல், 'இந்து' இதழில் 1987 நவம்பர் 11-இல் தரும் செய்தியிது: சிறீலங்கா அரசு தனது வழியில், அதிகார ஒப்படைப்புத் திட்டத்தைச் சட்டமாக்கித் தள்ளியது. தமிழர்களுக்கு மேலும் ஏற்புடைய வகையில் அதில் முன்னேற்றம் செய்யக் கோரும் இந்தியாவின் வேண்டுகோளை மதிக்கவில்லை. இந்தியத் தூதர் ஜே.என். தீட்சித் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளை சிறீலங்கா அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்; ஒப்பந்த விதிகளின்படி இந்தியா கூறும் யோசனைகளை அத்திட்டத்தில் சேர்க்க வேண்டியதன் தேவையைக் கூறினார்;; ஆனால் பயனளிக்கவில்லை.

இந்தியப் படையின் உதவியுடன் வடக்கு-கிழக்கு மாநிலத்தின் முதல்வராக வந்த, ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பைச் சேர்ந்த அண்ணாமலை வரதராசப் பெருமாளின் அரசு, ஒரு கண் துடைப்பாகவும், உலகை ஏமாற்றவும், உண்மைப் போராளிகளைத் தாக்கவும், அப்பாவிகளைக் கொடிய அல்லலுக்குள்ளாக்கவும் பயன்பட்டதேயன்றி, தமிழருக்கு அதனால் நன்மை செய்ய முடியவில்லை. ஆட்சி அமைத்து மூன்று மாதங்களுக்குப் பின்பு, 1989 பிப். 27இல், தனது அரசு செயல்படத் தொடங்க முடியவில்லையென வரதராசப் பெருமாள் வருத்தப்பட்டார். அதே ஆண்டு ஜூலை 25 இல் கொடுத்த பேட்டியில், மாநில மன்றத்திற்குரிய தன்னாட்சியைக் கொடுக்க கொழும்பு தவறிவிட்டது என்றும், இந்திய அமைதிப்படையைத் திரும்பப் பெறுவதற்கு முன்பு அதிகார ஒப்படைப்புச் செய்ய வேண்டுமென்றும் கூறினார். ஆனால், அவர் வேண்டுதலை எவரும் மதிக்கவில்லை. அடுத்த இரண்டு மூன்று மாதங்களில் இந்தியப்படை திரும்பிவந்தது; அவரும் பதவியிழந்தார். தமிழ் மாநிலம், அதிகார ஒப்படைப்பு ஆகியன பழங்கதை ஆயின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதற்கிடையில், 1988 இறுதியில், குடியரசுத் தலைவர் பதவிக்கு பிரேமதாசாவைப் புதிதாகத் தேர்ந்தெடுத்தனர். ஆட்சிக்கு வந்தது முதல் இந்தியப் படை வெளியேற வேண்டுமென்பது அவருடைய நிலை. அந்நிலைக்கு ஆதரவு தரும் வகையில், அவ்வாறு வெளியேறாவிட்டால், அந்நாட்டில் உள்ள இந்தியர் தாக்கப்படுவர் என ஜனதா விமுக்த பெரமுனா எனும் இடதுசாரித் தீவிரவாத அமைப்பின் தலைவர் ரோகன விஜயவீரா எச்சரித்தார். படையைத் திரும்பப் பெறவேண்டுமென 1989 ஜூனில் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த ஆண்டு அக்டோபர் முடிவுக்குள் அது வெளியேறியது.

சுமார் 50,000 பேரைக் கொண்ட இந்தியப் படையின் தாக்குதலால் பெரும் இழப்பிற்கும் பேரிடருக்கும் உள்ளான தமிழ் ஈழ மக்கள் அது வெளியேற விரும்பியது இயல்பே! சிங்களரில் ஒரு பகுதியினர், ஒப்பந்த நிறைவேற்றம் என்ற பெயரில் அது இலங்கையில் தங்கிவிடுமோ என அஞ்சினர். ஆனால் அந்த அச்சத்திற்கு இடம் கொடாமல், இந்தியப் படை சிங்களர் கேட்டுக் கொண்டபடியே அமைதியாகத் திரும்பியது!

இந்திய - இலங்கை ஒப்பந்த நிறைவேற்றத்தில் இந்தியா நேரடியாக ஈடுபட்டது குறித்துத் தாம் மிகவும் களிப்படைவதாக, 'சன்டே டைம்ஸ்' கிழமை இதழுக்கான நேர்காணலில் ஜெயவர்தனே சொன்னதை 1989 ஜூலை 24 இல் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' வெளியிட்டது. ''ஜே.ஆர். ஜெயவர்தனெயும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் சண்டையிடும் அரங்கினுள் ராஜீவ் காந்தியெனும் தீர்ப்பாளர் (நடுவர்) வருகிறார். வந்தவர் ஜே.ஆர். ஜெ-வுக்குப் பதிலாகப் புலிகளுடன் சண்டையில் இறங்குகிறார். இதையடுத்து ஜே.ஆர். ஜெ- தீர்ப்பாளர் (ரெஃபரி) ஆகிறார்... நமக்காக இந்தியப் படை வீரர்கள் இறந்தனர், அந் நாட்டின் பணம் செலவிடப்பட்டிருக்கிறது, நாம் அவர்கள் அனைவருக்கும் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். இலங்கையை அடுத்து இந்தியாவையே நான் மிகவும் நேசிக்கிறேன்''.

கூட்டுச் சதியின் காரணமாக உடலும் உள்ளமும் படுகாயப்பட்டிருக்கும் தமிழரைப் பார்த்துச் சிங்கள இனவெறி சிரிக்கும் விதம் இது!

www.tamilarangam.net

# தொல்லைகளிடையே தொடரும் போர்:

ஜெயவர்தனெவுக்குப் பின்பு, பிரேமதாசா காலத்தில் ஈழ உரிமைப் போர் தொடர்ந்தது. அவ்வமையம், மெத்தச் சிரமப்பட்டுச் சேகரித்த கருவிகளைக் கப்பலில் கொண்டுவந்த வீர மறவன் கிட்டு எனும் கிருஷ்ணகுமாரைக் கைது செய்ய இந்திய அரசு முயன்றதால் அவர் கடலில் மூழ்கி மறைய வேண்டியதாயிற்று.

திருமதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கா 1994 ஆக. 19இல் இலங்கையில் 11-வது பிரதமர் ஆனார். அவருடன் விடுதலைப் புலிகள் நிபந்தனையின்றிப் பேச ஒப்புதல் அளித்தனர். போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு, 1995 ஜனவரி முதல்வாரத்தின் முடிவிலிருந்து அது நடப்பிற்கு வந்தது. ஒற்றை அரசை விட நாட்டின் ஒற்றுமையைப் பற்றித்தான் நமக்கு அக்கறை என நம்பிக்கைதரும் வகையில் அப்பொழுது அறிவித்தார். அதே ஆண்டு நவம்பரில் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் பெரும் ஆதரவுடன் வெற்றி பெற்றார். ராஜீவ் கொலை வழக்கில் புலிப் படைத் தலைவர் குற்றம் சாட்டப்பட்டிருப்பினும், அவருடன் சமாதானம் செய்துகொள்வதில் தவறில்லையென்றும், பாலஸ்தீனருக்கும் இசுரேலிய யூதருக்கும் இடையில் நெடுங்காலம் கடும் சண்டை நடந்தும் அவர்கள் கலந்து பேசித் தீர்வுகாண முடிந்தது என்றும் 1995 ஜனவரி பிற்பகுதியில் கருத்தறிவித்தார். ஜனதாக் கட்சியின் தலைவராகவும், பிரதமர் நரசிம்மராவ் நிருவாகத்தில் உள்வட்ட (காபினட்) அமைச்சர் நிலையில் தொழிலாளர் தர ஆணையத்தின் தலைமைப் பொறுப்பிலும் உள்ள டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி, சந்திரிகாவின் கருத்துக்குக் கடும் எதிர்ப்பை ஜன. 25 இல் தெரிவித்தார். பிரபாகரனைக் கைது செய்யவேண்டும் என்றும், இலங்கை அரசால் அஃது இயலவில்லையெனில் அவருடன் நேரடிப் பேச்சுவார்த்தை இருக்கக்கூடாது என்றும் பாலஸ்தீனியர் தலைவர் அராஃபத்துடன் அவரை ஒப்பிடுவது பொருளற்றது (நான் சென்ஸ்) என்றும் பகர்ந்தார்.

இதையடுத்து, மார்ச் மாதம் சந்திரிகா டில்லி சென்று இந்தியப் பிரதமரைக் கண்டார். அப்பொழுது, தம்பி. பிரபாகரனைக் கைது செய்து அனுப்புவது (எக்ஸ்ட்ராடிசன்) குறித்தும் பேசினர். புலிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுக்கும் இலங்கை அரசுக்கும் நடந்துகொண்டிருந்த கலந்துரையாட லுக்கு இஃது ஒரு முட்டுக்கட்டை ஆயிற்று. மீண்டும் மோதல்கள் தொடங்கின. இதைத் தொடர்ந்து, ''இந்தியா டுடே'' இதழுக்கான நேர்காணலில், ராஜீவ் காந்தியைக் கொல்ல முடிவெடுத்தவர் பிரபாகரன் எனச் சந்திரிகா கூறினார். இவ்வகையில் விடுதலைப் புலிகளை அந்நியப்படுத்திய பின்பு, ஆகஸ்டு மாதத்தில் அதிகார ஒப்படைப்புக்கான அரசியல் சட்டச் சீர்திருத்தத் திட்டத்தைச் சந்திரிகா வெளியிட்டார். அதை விடுதலைப் புலிகளுக்கு அனுப்ப வில்லை! அவர்களுக்கு ஒருபடி அனுப்பவேண்டுமென்றும், அதி கார ஒப்படைப்பை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை புலிகளுக் குத் தரவேண்டுமெனவும் , அமைச்சர் தொண்டமான் கருத்தறிவித் தார். அதைச் சந்திரிகா ஏற்கவில்லை.

1995 ஆகஸ்டில் அறிவிக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளில் பெருங்குறைகள் உள்ளன. தமிழர் தாயகம் என்பது ஏற்கப்படவில்லை. சட்டம் இயற்றுவதிலும், காவல் துறை அமைப்பிலும் மய்ய அரசு மாநிலங்களை அடக்கும் வாய்ப்பு மிகுதி. பிற சிங்கள மாநிலங்களில் இருந்து வேறான தமிழ் ஈழத்தின் தனித் தன்மைக்குத் தேவையான காப்பு இல்லை. இந்நிலையில் சிங்களர் மேலாதிக்கத்திலிருந்து தமிழர் தப்புதல் இயலாது. அத்துடன் வடக்கு - கிழக்கு மாநில (மண்டல) அமைப்பைத் தெளிவாக வரையறுத்துக் கூறவில்லை. இவ்வளவு ஓட்டைகள் சிங்களர் ஆதிக்கத்திற்குத் துணையாக இருப்பினும், இத் திட்டத்திற்கு எதிர்க்கட்சியான அய்க்கிய தேசியக் கட்சி ஒப்புதல் அளிக்க மறுக்கிறது; புத்த குருக்கள் எதிர்க்கிறார்கள்.

ஆக, இப்பொழுது முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் சட்டச் சீர்திருத்தம் ஒரு பிரச்சார விளம்பர நோக்கிற்கு பயன்படுமேயன்றி சிக்கலைத் தீர்க்க உதவாது.

எல்லாவற்றிற்கும் மேலாக, அதிகார ஒப்படைப்புச் சீர்திருத்தம் பேசிக்கொண்டே கடுமையான போர் ஆயத்தத்திலும், நடத்தலி லும் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பது அதன் நல்லெண்ணத்தைக் காட்டவில்லை.

புலிகளின் மீதுள்ள கடுமையான குற்றச்சாட்டுகள் இரண்டு. ஒன்று, அதன் தலைவர், ராஜீவ் கொலைக்குத் திட்டமிட்டார் என்பது. இதைப் புலிகள் தொடக்கத்தில் இருந்து மறுக்கிறார்கள். இப்பொழுது 1995 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கொலையின் சதிபற்றி விசாரிக்கும் ஜெயின் ஆணையத்தின் முன்பு சொல்லப்ப டும் சாட்சியங்கள் சதித்திட்டம் தீட்டியவர்கள் வேறானவர்கள் எனக் காட்டுகின்றன. உமாமகேசுவரன் கொழும்புவில் கொலை செய்யப்பட்டபொழுது புலிகளின் மீது பழிசுமத்தினர். ஆனால், 1991 ஜூலையில், இரண்டு ஆண்டுகள் கழித்து, அவரைக் கொன்றவர்கள் அவருடைய 'பிளாட்' இயக்கத்தவர்களே என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மை வெளிப்பட்டது. ஆகையால், குற்றம் சுமத்தப்பட்டதா லேயே ஒருவர் குற்றவாளியாக மாட்டார். ஓர் இனத்தின் விடுத லைப் போராட்டத்தின் தலைவரை இம் முறையில் ஒதுக்கி ஓரங்கட்ட முயல்வது மிகப்பெரும் சமூகத் தீங்காகும்.

இரண்டாவதாக, புலிகள் சமாதானத்தை விரும்புவதில்லையென் றும், மோதலிலும், வன்முறையிலும் தணியாத ஆசை கொண்டவர் கள் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். இதிலும் உண்மையில்லை. தமது மக்கள் மானத்தோடு வாழ, நிலையான கண்ணியத் தீர்வை அவர்கள் ஆவலோடு எதிர்நோக்கியிருக்கிறார்கள்; அந்த வாய்ப்பை ஆதிக்க வெறியர்கள் மறுப்பதாலேயே அவர்கள் வெயிலிலும் குளிரிலும் மழையிலும், பனியிலும், காடுமேடுகளிலும், சிற்றூர், பேரூர்களிலும், கல்லிலும் முள்ளிலும், குழியிலும் மேட்டிலும், பதுங்கியும் பாய்ந்தும், காணாத இடமெல்லாம் அலைந்து திரிந் தும், ஆயிரக்கணக்கில் உயிர்த்தியாகம் செய்து, முப்படைகளை எதிர்த்து வரலாறு காணா வகையில் ஆண்களும், பெண்களும் வீரச் சமர் செய்கிறார்கள்.

சமாதானத்தைப் புலிகள் விரும்புகிறார்கள். அய்க்கிய நாட்டு அவையின் முயற்சியின்கீழ் இலங்கைத் தமிழர் சிக்கலுக்குத் தீர்வுகாண விரும்புவதாக, அதனுடைய மனித உரிமை ஆணையத் திடம் 1989 பிப்ரவரியில் புலிகள் இயக்கம் தெரிவித்தது. 1992 பிப்ரவரி 23 இல், தம்பி பிரபாகரனின் நேர்காணல் ஒன்றை ''சண்டே அய்லண்ட்'' செய்தித்தாள் வெளியிட்டது. அய்.நா. மன்ற முயற்சியில் தமிழ் ஈழச் சிக்கலுக்குத் தீர்வு காணத் தாம் விரும்புவ தாக அதில் தெரிவித்துள்ளார்.

இவர்களின் நிலை இப்படியிருக்க, சிங்களர் இதற்கு ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள். 1994 செப்டம்பர் 30-இல், இலங்கை இனப் பிரச்சினையை அய்.நா. அமைப்பின்மூலம் தீர்த்துக் கொள்ள லாம் என அதன் பொதுச்செயலாளர் பூட்ரோஸ் கலி தெரிவித்தார். ஆனால், சிறீலங்கா வெளியுறவு அமைச்சர் லட்சுமண்கதிர்காமர் அதைத் தமது அரசு ஏற்காதெனத் தள்ளிவிட்டார். பாலஸ்தீனம், காசுமீர், தென் ஆப்பிரிக்க இன ஒதுக்கல், போஸ்னியா எனப் பலப் பல சிக்கல்களில் அய்.நா. உதவும்பொழுது, 1983 இல் இருந்து பெரும் தாக்குதலுக்கு உள்ளாகி, ஆயிரக்கணக்கானவர் களை மடியச் செய்து எல்லாவகைத் துன்பங்களையும் தந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர் சிக்கலைத் தீர்க்க உதவ வருவதை ஏன் தடுக்கவேண்டும்?

www.tamilarangam.net

# தீர்வு:

ஈழத் தமிழர்கள் - நியாயமான உரிமையும், சமனியமும், கண்ணியமான பாதுகாப்பும், அமைதியும் பெற இரண்டே தீர்வுகள்தான் உண்டு. ஒன்று, தன்னுரிமையுள்ள தமிழ் மாநிலத்தை நல்கும் மெய்யான கூட்டரசு அமைதல். இரண்டாவது, இது கிட்டாத நிலையில், வேறு வழியில்லாமல், போராடிப் பெறவேண்டிய விடுதலை. இரண்டில் எது தீர்வாக இருக்கவேண்டும் என்பதையும் அதற்கான வழிமுறைகளையும் இலங்கையில் உள்ள தமிழர்களே - சூழலுக்குத் தகத் தேர்ந்தெடுக்கவேண்டும். முதல்வகைத் தீர்வுக்கு இடம் ஏற்படா நிலையில்தான் தந்தை செல்வா இரண்டாம் வகைத் தீர்வை நாடவேண்டியவர் ஆனார்.

வேறுபட்ட இனங்கள் நிகரான உரிமையுடன் இணங்கி வாழ எளிய இயல்பான நாகரிகத் தீர்வாகிய கூட்டரசு முறையைச் சிங்களர் வெறித்தனமாக எதிர்க்கிறார்கள். படித்தவர்களும், பெரு வசதி படைத்தவர்களும் தன்னல வேட்கையாலும், பாமரர்கள் அறியாமையாலும், அச்சத்தாலும் அவ்வாறு செய்கிறார்கள்.

நியாயத்திற்குப் பணியாமல் அநியாயப் பாதையில் சிங்களப் பேரின ஆதிக்கம் செல்லக் காரணம் உலகில் எவரும் தமிழ் ஈழ மக்களின் முயற்சிக்குத் துணை வர மாட்டார்கள் எனும் எண்ணமேயாகும்.

ஓரினம் சார்ந்த, தமிழ்நாட்டில் உள்ளவர்கள் துணை நிற்கக் கடமைப்பட்டவர்கள்; உணர்வால் ஒன்றிச் செயல்படவேண்டியவர்கள். அவர்கள் இந்திய அரசை இயக்கி, அதன் வழி நடக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த அரசு எப்படி நடந்துகொள்கிறது? மலையகப் பெருந் தோட்டத் தமிழர்களின் குடியுரிமைச் சிக்கலைத் தீர்த்து வைப்பதில் அக்கறை கொண்டு நியாயத்திற்கு முயலாமையும், இந்திய - இலங்கை ஒப்பந்தததைத் தொடர்ந்து இந்தியப் படை உண்டாக்கிய பெரும் அழிவும், அதைத் தொடர்ந்து விடுதலைப் போருக்கு உதவும் கருவிகளைக் கப்பலில் கொண்டு வந்த கிட்டு மறைவதற்குக் காரணமான நடவடிக்கையும், கடந்த பல ஆண்டுகளாக, மின்சாரம், எரிபொருள், உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அன்றாடத் தேவைப் பண்டங்கள் முதலியன தாராளமாகக் கிடைப்பதைத் தடை செய்து, ஈழ மக்களைப் பட்டினியால் வாட்டி இப்பொழுது, 1995-ன் பிற்பகுதியில், அவர்கள்மீது கடும் போர் தொடங்கியுள்ள சிங்கள வெறியரசின் நடப்பிற்கு உதவுகிற போக்கும், இந்திய அரசு முன்னோக்கிய நல்லெண்ணத்துடன் நடந்துகொள்வதாகக் காட்டவில்லை.

இருவகைத் தீர்வில், விடுதலையை ஆதரிப்பது பன்னாட்டுச் சட்டப்படி இயலாதெனக் கூறினும், கூட்டரசு முறைக்காவது இலங்கையின்மீது இந்தியா போதிய அழுத்தம் தராதது ஏன்? முதலில், தன்னாட்சியுள்ள மெய்யான கூட்டரசைத் தனது மக்களிடையே இந்தியா ஏன் தோற்றுவிக்கவில்லை எனச் சிங்களர் திருப்பிக் கேட்பர். இரண்டாவது, இருவகைத் தீர்வில் எது இலங்கையில் வெற்றி பெற்றாலும், பஞ்சாப், காசுமீர், அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்கள் ஆகியவற்றில் தீவிரமாக இருக்கும் தேசிய இனங்களின் போராட்டம் கூர்மையடைவதற்கு அது முன் மாதிரியாக ஆகிவிடும்.

நிலைமை இப்படியிருப்பதால், சிங்களப் பேரின ஆதிக்கமும், பார்ப்பனத் தரகு முதலாளிய (பனியா) சுரண்டல் கூட்டமும் கூட்டுச் சேர்ந்து அரசு வன்முறையையும், அரசியல் தந்திரத்தையும் சூதையும் பயன்படுத்தி வஞ்சிக்கப்படும் இனங்களை ஒடுக்க முற்பட்டுவிட்டார்கள்.

ஓர் இனத்தின் உறவு மக்கள் பெரும் அல்லலுக்கு இலக்காகியுள்ள தருணத்தில், அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவும் உணர்வின்றி வாழ்வோர் விலங்கு நிகர் மாக்களே! அறியாமையும், பேராசையும் அளவுக்கு மீறிய களியாட்டமும் அத்தகு நிலைக்கு நம்மைத் தாழ்த்திவிடக் கூடாது. இந்த மெய்ம்மையை உணரும் தமிழர்கள், எதிர்காலத்திலேனும் மானமுள்ள வாழ்வைப் பெற ஈகங்கள் செய்யவேண்டியவர்கள் ஆகிறார்கள். தமக்கிருக்கும் அறிவு, ஆற்றல், செல்வம், நேரம், பதவி, வாய்ப்பு முதலியவற்றைச் சுக வாழ்விற்கும், ஆடம்பரத்திற்கும் பயன்படுத்திக் கொள்வதைக் கடுமையாகக் குறைத்துக்கொண்டு, இலங்கைத் தமிழருக்கு இயலும் வகையிலும் துணை நிற்கவேண்டும் என்பதை மறவாமல், ஓயாது செயல்படுவதே பொதுவாக அனைவரும் இக்காலத்தில் செய்யவேண்டிய ஈகம் ஆகும். உரிமைக்கு உழைப்பதே கடமை; அந்தக் கடமையில் பிறப்பதே உரிமை!

www.tamilarangam.net

# திராவிடர் கழக வெளியீடுகள் (தொடர்ச்சி)

| வ.எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|---|
| 51. | 69 சதவிகித இடஒதுக்கீடு சுப்ரீம் கோர்ட்டின் அண்மைத் தீர்ப்பு - தி.மு.க. அரசு நிலை என்ன? | கி. வீரமணி |
| 52. | அம்பேத்கர் பேசுகிறார் | கோ. சாமிதுரை |
| 53. | இன்றைய தமிழர் தலைவர் வீரமணி | கலி. பூங்குன்றன் |
| 54. | கலைஞருக்கு பதில்கள் | கலி. பூங்குன்றன் |
| 55. | திராவிடர் இயக்கம் (தொகுப்பு நூல்) | கலி. பூங்குன்றன் |
| 56. | மார்க்சிஸ்டுகள் சிந்தனைக்கு | கலி. பூங்குன்றன் |
| 57. | மனித வாழ்வுக்குத் தேவை நாத்திகமா? ஆத்திகமா? | கலி. பூங்குன்றன் |
| 58. | சோ என்ற இரட்டை நாக்குப் பார்ப்பனர் | கலி. பூங்குன்றன் |
| 59. | இராமாயண எதிர்ப்பு - ஒரு இயக்க வரலாறு | கலி. பூங்குன்றன் |
| 60. | திராவிடர் கழகத்தின் அணுகுமுறை | கலி. பூங்குன்றன் |
| 61. | புன்னகை | பேரறிஞர் அண்ணா |
| 62. | பெரியார் ஒரு சகாப்தம் | பேரறிஞர் அண்ணா |
| 63. | தீ பரவட்டும் | பேரறிஞர் அண்ணா |
| 64. | கம்பரசம் | பேரறிஞர் அண்ணா |
| 65. | தமிழர் தலைவர் | சாமி சிதம்பரனார் |
| 66. | தமிழின இளைஞர்களுக்கு அழைப்பு | டாக்டர் கலைஞர் |
| 67. | சமூக நீதிப் போர் | டாக்டர் நாவலர் |
| 68. | தமிழன் தொடுத்த போர் | பே.மா. இளஞ்செழியன் |
| 69. | நீதிக்கட்சி அரசு பாடுபட்டது யாருக்காக? | பு. இராசதுரை |
| 70. | ரமண மகரிஷியின் மர்மங்கள் | ரமணாஸ்ரமம் பெருமாள்சாமி |
| 71. | பெரியார் ஒரு முழு புரட்சியாளர் | ந. இராமநாதன் |
| 72. | கிறிஸ்தவர்கள் சிந்தனைக்கு | ஜார்ஜ் |
| 73. | மனித உரிமைப்போரில் பெரியார் பேணிய அடையாளம் | கு.வெ.கி. ஆசான் |
| 74. | ஜெயலலிதா பின்னாலா திராவிடர் கழகம் சென்றது? | பேராசிரியர் இறையன் |
| 75. | இமயத்தில் பெரியார் | கன்சிராம் |
| 76. | பெரிய புராண ஆராய்ச்சி | கருவூர் ஈழத்து அடிகள் |
| 77. | கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? | ராகவன் |
| 78. | இதிகாசங்களின் தன்மைகள் | பண்டிதர் இ.மு.க. |
| 79. | தந்தை பெரியாரும் தாழ்த்தப்பட்டோரும் | தஞ்சை ஆடலரசன் |
| 80. | நான் ஏன் கிருஸ்தவனல்ல? | பெட்ரண்ட் ரசல் |
| 81. | மதம் என்றால் என்ன? | ராபர்ட் ஜி. இங்கர்சால் |
| 82. | பேய் - பூதம் - பிசாசு அல்லது ஆவிகள் | இங்கர்சால் |
| 83. | கடவுள் தோன்றியது எப்படி? | தமிழாக்கம் பேரா. சி. வெள்ளையன் |
| 84. | நான் நாத்திகன் - ஏன்? | தோழர் கே. பகத்சிங் |
| 85. | வல்லம் விழா உரை | தொகுப்பு நூல் |
| 86. | புலவர் இமயவரம்பன் தொண்டு | " |
| 87. | பாரத ஆராய்ச்சி | " |
| 88. | புராண ஆபாசங்கள் அல்லது இரு இளைஞர்கள் | " |
| 89. | வானொலியில் தந்தை பெரியார் | " |
| 90. | வீரமணியின் செவ்வி (பேட்டி)கள் | " |
| 91. | அம்மா பேசுகிறார் | " |
| 92. | கடவுளர் கதைகள் | " |
| 93. | பேய், பிசாசு, பில்லி, சூனியம், ஆவிகள் பற்றிய மோசடிகள் | " |
| 94. | பார்ப்பனர் எதிர்ப்புக் கருத்துக்கள் | " |
| 95. | மார்க்சிய - லெனினிய குழுக்களில் உள்ள பார்ப்பனர் அல்லாதார் சிந்தனைக்கு | " |
| 96. | இளைஞர்களே! உங்களுக்குத் தெரியுமா? | " |
| 97. | சமஸ்கிருத ஆதிக்கம் | " |

www.tamilarangam.net

## ஆயுதம் ஏந்தியது ஏன்?

நவீன உலகின் நாகரிகக் கூட்டாட்சி முறையைக் கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக்கொள்ள மறுத்தனர்; மிகத் தொன்மைக் காலந்தொட்டு வாழும் ஈழத்தின் தமிழ்ப் பகுதிகளைப் படிப்படியாகச் சிங்களர் குடியேற்றத்தைக் கொண்டு பறித்தனர். நியாயமுள்ள சமனிய உரிமைகளைக் கேட்கும் தமிழரை அரசின் வலிமையைப் பயன்படுத்தி அடக்கினர். இடர்களைத் தாங்கிக் கொண்டு அறவழியில் போராடி ஓரளவேனும் உரிமைகளைப் பெறுவதற்கு ஆதாரமாகச் செய்துகொண்ட ஒப்பந்தங்களை வெட்கமின்றி வெற்றுத் தாள் ஆக்கினர். தமிழருக்கு அல்லவை செய்வது சிங்களருக்கு நல்லவையாகும் எனும் பொல்லாத பாதையில் தொடர்ந்தனர். இந்நிலையில், கருவியேந்திக் களத்தில் நிற்கவேண்டிய கட்டாயம் இளையருக்கு ஏற்பட்டுவிட்டது. குடிகளைக் காக்கவேண்டிய காவல் நாயாக அரசு இருக்க வேண்டும்; அதுவே நிதானம் அற்ற வெறி நாயாக மாறிவிட்டால், மக்களுக்கு ஒரு கடுமையான காப்பு வேண்டுமல்லவா?

**— இந்நூலில் பக்கம் 24–25**

நெருப்பொறி வெளியீட்டகம்
10, ஔலியா சாகிபு தெரு
திருவல்லிக்கேணி சாலை, சென்னை - 600 002

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்